உ

திருச்சிற்றம்பலம்.

கோடீசுவரரென்னும் பேருடைய

கொட்டையூர்

சிவக்கொழுந்துதேசிகர்

பாடிய

கோடீச்சுரக்கோவை.

(*)

இஃது,

சிதம்பரம்

கருணானந்தசுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

(*)

சிந்தாத்திரிப்பேட்டை

நாராயணசாமிமுதலியார்

அண்டிஸன் அவர்களால்

தமது

பிரபாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1895௵

கணபதிதுணை.

கோடீச்சுரக்கோவை.

காப்பு.

கோடீச்சுரனுதவுகோடிவிநாயககவிக்............................*
கோடிச்சுரக்கோவைகூறுவிப்பாய்-நாடிவந்து....................*
வஞ்சகமாதிமருவுமெளியேன்வலிய..............................*
நெஞ்சகத்தேநீயொருசார்நின்று....................................*

காட்சி.

சீர்கொண்டதாமரைப்போதைந்திரண்[illegible]கநல்
லேர்கொண்டநீலமிரண்டோர்குமுதமிவ[illegible]தனை
னீர்கொண்டவேணியர்கோடீச்சரேசர்நெடுவரைமேல்
கார்கொண்டகாவினிடையிலோராயிரங்கண்ணுற்றதே, (௧)

இடையில்-நடுவில், இடை[illegible]. ஆவி-உயிர், தடாகம்.

ஐயம்,

பாரோவலாரியின்பாருலகோ[illegible]பார்வையன்ன
னாரோவிதிதன்பதியோமதியோடொளிரும்விண்ணிற்
றேரோதைசூழ்தருகோடீச்சுர[illegible]சிலம்பி
னேரோர்வடிவெடுத்தன்ன[illegible]ளிர்ந்திலங்கிடமே. (௨)

மதியோடொளிரும்விண்ணில்-மதியொடுவிளங்குகின்றவின்போல்

தெளிதல்.

கடிபேறுகொன்றையர்கோடீச்சுரவெற்பிற்கண்டதொரு
கொடிபோயிதனடிக்கொண்டதுபூமுகங்கொண்டதுவேர்
முடியேறியவெண்டிருநோக்கினையுறன்முன்னுமிக்கப்
படியேயிதனிலையென்றுநெஞ்சேசெயலைபன்னிமே, (௩)

பூ-பொலம்,மலர். வேர்,வேர்,வேர்வு. ஏறிய-ஏறின. படி-பூமி,தன்மை,

குறிப்பறிதல்.

பாலார்மொழியங்கர்கோடீச்சுரவெற்பின்பாலுறுநா
மாலாயினுமங்குமால்சோர்ந்துமுன்பின்மகிழ்வுபெற

பேடைமொழிதன்னுள் விடத்தோடமிர்தம் விளைந்ததொக்கு
நடைமயிலனையினள் வேல்விழித் தோன்றியநோக்கங்களே. (௪)

இரந்துபின்னிற்றற்கெண்ணல்.

கனமுந்துறுகண்டர்கோடீச்சுரவெற்பிற்கண்டிடுமின்
னினமுந்துவனிடையாளின்பநல்குநம்பின்னையெல்லா
மனமுந்துரைக்கின்மனமேவருகிவளாருமிக்க
தனமுந்தையயுமுள்ளாரில்லையென்பர்கொல்சார்ந்தவர்க்கே. (௫)

நல்கும்-நல்குவள். மன.பொருந்த.

இரந்துபின்னிலைநிற்றல்.

சேவார்கொடியினர்கோடீச்சுரேசர்சிலம்பிலென்மெய்ப்
பூவாரிலைதக்கபுன்னைனின்கணின்கண்ணெனுமப்பூமருவு
மேவார்நனையுமேவிப்பராமுகமேவியிங்ஙன்
பாவாய்பண்பாவாய்கிலர்போலநிற்றல்பண்பாவுனக்கே. (௬)

முன்னிலையாக்கல்.

நாட்டங்கொள்பாலத்தர்கோடீச்சுரமன்னனன்னுதலாய்
கூட்டங்கொள்பாங்கியர்தம்மைவிட்டீண்டுக்குறுகிமதன்
வேட்டஞ்செயுமிடத்தேதனிநின்றவென்மேன்மையொடு
தோட்டங்கொள்காவலர்க்காவலுந்தேறுவிதுசொல்லுகவே. (௭)

தோட்டங்கொள் காவலர்க்கு இதழுறுகுடையசோலைமலருக்கு.

வண்டோச்சிமருங்கணைதல்.

வேழமுரித்தவர்கோடீச்சுரநித்தர்வெற்பிலிந்த
வேழையிடத்துப்பலசிதம்பாடியிளைத்திவடன்
கூழைவிரும்பியுறைவண்டுகாள்கணங்கொண்டுசென்று
குழுமக்காவலர்நல்கமுதார்ந்துசுகம்பெறவே. (௮)

ஏழை-ஏழை,மடந்தை-கூழை கூழினை,கூந்தல்.

காவலர்-அரசர்,சோலைமலர்.

இதுவும் வண்டோச்சிமருங்கணைதல்.

விடையுறுகேதனர்கோடீச்சுரவெற்பின்மேவுமன்ன
நடையினளுங்களையென்கண்ணெனமுன்னவின்றிடுதல்
புடையுறுகானறிவேன்வண்டர்நீவிரிப்போதிவட
னிடையைமுறிக்கத்தலைப்பட்டிருக்கின்றிரென்னிதுவே. (௯)

வண்டர் வண்டுகள்-தலைப்படல் சென்னியிற்பட்டிருத்தல், தொடங்கல்

Dr. U. V. S. IYER LIBRARY ★ MADRAS-90 ★

மெய்தொட்டுப்பயிறல்,

நெய்ப்பட்டசூலத்தர்கோடீச்சுரவெற்பினிற்சசந்
தைப்பட்டமாரனெய்தாலுமெய்தானசங்கையனைப்பாங்
கைப்பட்டமாதனமாதனமீங்குநங்கைப்பட்டதால்
மெய்ப்பட்டிடுதனைப்பெற்றார்க்கெவ்வின்பமுமேவுமே. (ய)

பொய்பாராட்டல்

மெய்யன்பருக்கருள்கோடீச்சுரகிரித்கர்வெற்பனங்கே
பொய்யன்றிவைநின்னிடைக்கிணையாமெனப்போந்துசிலர்
கையினடிபட்டரற்றுந்துடியகைக்கண்டுவெம்போர்
செய்யுங்கணைமதன்கண்மறைவாகித்திரிந்திடுமே. (யக)

இடம்பெற்றுத்தழாஅல்.

படர்ந்திகழ்பூண்புனைகோடீச்சுரவள்ளல்பைம்பொன்வெற்பின்
மடங்கைநற்பொன்னெனுநீயுங்கண்சோலைவளர்நிழலுந்
தடம்பெறுமாரன்கணையுமிங்கேய்ந்திடச்சார்ந்தனன்யா
னிடம்பொருளேவலெல்லாமுளவெனக்கென்குறைமயே, (யஉ)

ஏவலர்-ஏவலாளர், அம்பாகியமலர்.

இதுவு மிடம்பெற்றுத்தழாஅல்.

தக்கோர்புகழ்சண்பைக்கோடீச்சுரநம்பர்தம்மசனார்க்
கக்கோலக்காவிற்றம்பொற்றாளந்தாமீந்தடிமையினேற்
கிக்கோலக்காவிலுன்பொற்றாளீநல்கிடவரிகண்
மிக்கோதைசெய்குழன்மாதேயின்றுன்னைவிடேத்தனரே. (யந)

வழிபாடுமறுத்கல்.

வலிவுறுசூற்படைக்கோடீச்சுரேசர்மணிவரைமேற்
பொலிவுறுதோழியர்பாங்கியராத்தனிப்போந்தாநின்று
மெலிவுறுமென்றனைக்கரத்தருள்சாந்தமிசைக்கொடுத்தன்
மலிவுறுபோதமுடனளிவாய்ந்துறைமாதவியே. (யச)

பாங்கியராக-பக்கத்திற்சென்றவராக. சாந்தம்-சந்தனமரம், பொறுமை போதம்-ஞானம், பூவுமுகு. அளி-கருணை, வண்டு-மாதவி-குருக்கத்தி, தவத்தினள்.

இடையூறுகிளத்தல்.

கொந்தார்மலர்ச்சடைக்கோடீச்சுரேசர்குவட்டில்வள
ரந்தாமரைத்திருவேவரியெனக்கெவ்வளவுதனைந்

தந்தாலுமாங்கதொருபெரிதன்றுநரிலமையும்
பைந்தாட்குவளைநிகருன்விழியருட்பார்வையதே. (௰௫)

இதுவுமிடையூறுகிளத்தல்.

துண்டம்பிபுனைகோடீச்சுரேசர்சுடர்க்கிரிவாழ்
பணைட்ருதிருதொன்மயிலனையாயிந்தப்பாரிடத்தே
தண்டரும்போதெங்கெனத்தேடிவண்டுகள்சார்தலுண்டு
வண்டிடந்தேடிநின்கைப்போதுசார்ந்ததுமாவியப்பே. (௰௬)

நீடுவினைந்திரங்கல்.

வில்லார்சலவிற்கோடீச்சுரேசர்தம்வெற்பிலிந்த
நல்லாள்பகங்கைமுகம்வாய்கடங்கொண்டயநீவை
யெல்லாமினியமலராவியற்றிபிறைதயமொன்றுங்
கல்லாலகுத்ததென்னேவிதியாகியகைதவனே. (௰௭)

மறுத்தெதிர்கோடல்.

நடநவிலீசர்தென்கோடீச்சுரவெற்பினுமினைய
வடன்மதன்*றன்னிடமேய்ந்திடப்போம்விழைவாவதனை
விடலருநாண்கொண்டகத்தசைத்தாலுமெலச்செலுமாற்
கடல்புரண்டாமற்றதனைத்தடுக்குங்கரையில்லையே, (௰௮)

*ஏய்ந்திட-பொருந்திட, மேய்ந்திட.விழைவாவதனை-ஆசை
யை,ஆசையாகிய பசுவை.நாண்-கயிறு,வெட்கம்.அகம்-மனம்.வீடு

வறிதுநகைதோற்றல்.

சகமுழுதும்புகழ்கோடீச்சுரேசர்தடஞ்சிலம்பிற்
ககமுதவுந்தளிர்க்காவிடத்திம்மணிக்கட்கரும்பின்
முகமதிற்றோன்றியமுத்தநகைக்கயன்முத்தநகை
நிகரலவேயொன்றுரைத்தாற்பழிப்பாநிகழ்தற்கே (௰௯)

முறுவற்குறிப்புணர்தல்.

வகைபூக்கசிருடைக்கோடீச்சுரசித்தர்மால்வரைப்பாற்
றொளைபூக்கவேர்கொண்டளிகொண்டுநீடுசகம்பயிலுந்
தகைபூத்தகாவில்வளரிம்முலைக்கொடிதன்னிடத்தோர்
நகைபூத்ததின்னதிலோர் மணந்தோன்றிடுநந்தமக்கே. (௨௰)

பூக்கவேர்-வேர்,ஏர்.அளிவண்டு,அன்பு முலைக்கொடி-முலையுடையகொ
டி,முல்லைக்கொடி.நகை - அரும்பு, முறுவல்.மணம் - வாசம், புணர்ச்சி.

மயங்குதலுறுத்தல்.

செல்வங்கிளரெழிற்கோடீச்சுரநம்பர்தீண்சிலம்பின்
வில்லங்கெடுத்தெதிர்வேள்படைசூழ்வரமேவியிங்குச்
சொல்லங்கமுற்றணியாரின்னகாரிகைதுன்னுரங்கொள்
வல்லங்கைகொணடனங்கூடல்பெற்றேமுண்மகிழ்வுரமே. (௨௧)

காரிகை-அழகு,பெண்.உரம்-மார்பு,வலி.வல்லம்-ஒருபட்டணம்,வல்-சூதாடுகருவி.கூடல்-மதுரை,புணர்வு.

புணர்ச்சியின்மகிழ்தல்,

மானேயிக்காவேபர் தாடீகமலமலர்மலர்வண்
டேனேவளருநினைபேரின்பம் வந்தனைச்சேர்ந்ததற்ற
நானேயத்தேனையுணவண்டுகணடாய்நன்னதியுடனே
வானோர்மதியணிகோடீச்சுரநித்தர்மால்வரைக்கே. (௨௨)

புகழ்தல்.

வெளிதருநீற்றரன்கோடீச்சுரவண்ணல்வெற்பின்வளர்
குளிருமைக்கூந்தலுன்கணணோக்கிமின் மயங்கொண்டலையு
மொளியுறுமின்னுன்னிடைநோக்கிவானிலொளித்திருக்குங்
களியுறுமன்னம்பறந்திடுநின்னடைகாண்பொழுதே. (௨௩)

ஏற்புறவணிதல்.

சொல்லணிநீடுபொருளணிமேற்பலசூழிலற்றட்
சில்லணியொன்றினொன்றேய்ந்ததைவேறுதெரிந்துமுலை
வல்லணிமீதினுலாவுறுகோவைவைனந்திடுகே
னல்லணிகண்டத்தர்கோடீச்சுரமன்னவாரணங்கே, (௨௪)

அணிந்துழிநாணிய துணர்ந்துதெளிவித்தல்.

பணிபெறுபூணினர்கோடீச்சுரவெற்பின்பான்மணஞ்செய்
கணிபெறுசோலையின்மாதேயுலாவுன்றன்கண்ணிலங்கு
மணிபெறுநன்மையுறவீண்டெழுதினன்மன்னிமுன்போ
லணிபெறவேதிமுடித்தேனிதிலொன்றுமையமின்றே, (௨௫)

பெருநயப்புரைத்தல்.

பங்கமுறுதிரும்போதுமலர்ந்துபனியினொடு
திங்கட்கெம்யாதுமுண்மேல்வதியாதுதிலகமுற்றிம்
மங்கையெழின் முகம்போலோர்நளினமலர்வண்டுகா
ளெங்குளதோதுமின் கோடீச்சுரேசரிமயத்திலே, (௨௬)

தெய்வத்திறம்பேசல்.

மேருமுடியிருப்போருமதனடிமேவினரு
நேருறநோக்கிமகிழ்ந்திடவேயன்னநீள்விழியாய்
வாருறுசேவணியர்கோடீச்சுரேசர்வளைத்ததெனச்
சேருறச்செய்ததுநம்மைமுன்னூழின்றிறமதுவே. (௨௭)

பிரியேனென்றல்.

மறியாரிடத்தினர்கோடீச்சுரேசர்மலரடிசெந்
நெறியாலடைந்தவர்நீங்குவரோதுடிநேரிடையாய்
வறியார்மனைப்பொன்மணமுபோன்மருவுனைவைத்தகலற்
கறியாதவனலனின்னினும் வேறென்னரும்பொருளே. (௨௮)

பிரிந்துவருகென்றல்,

தூவென்றகுலத்தர்கோடீச்சுரவெற்பிற்சூழெனைநீ
போவென்றுரைக்கினும்போகேனொடிவரைப்போதுசெலற்
கேவென்றகண்ணியுளதொன்றிரேனக்கிருந்திடினும்
வாவென்றுகைக்கொடுவந்திடுமீங்கென்மனம்விரைந்தே. (௨௯)

இடமணித்தென்றல்.

சங்கரரங்கணர்கோடீச்சுரமன்னதாழ்குழலா
யுங்கள்புனத்திலுலாவுங்கிளிகளுமொணமயிலு
மெங்கணசர்ப்பளிங்கார்சுவர்க்கோன்றலையென்றுமதிற்
றங்குறுஞ்சித்திரசித்திரமீதெனச்சாற்றுவரே. (௩௰)

தெளிவு,

சிங்கத்துரிபுனைகோடீச்சுரநிக்காதென்மதுரை
தங்கத்தமிழ்ச்சங்கத்தார் சொற்றவறினுஞ்சார்ந்துநந்தஞ்
சங்கத்திருந்துதமிழாய்ந்தவர்சொற்றவறுவரோ
விங்கிற்றுறையேவருவார்மனமேதெளிவின்னதுவே, (௩௧)

சங்கம் புணர்ச்சி, தமிழாய்ந்தவர்-இன்பமுணர்ந்தவர்.

செல்லுங்கிழத்திசெலவுகண்டுளத்தொடுசொல்லல்

மின்வார்சடையினர்கோடீச்சுரநம்பர்வெற்பின்மதன்
றன்வார்சிலையபிராமியின்சாபமுந்தம்முடியுங்
கொன்வார்கணைகளும்வெம்போரதனிடைக்கொண்டுனையும்
பின்வாவென்றேகிடல்பார்மனமேயொருபெண்ணுடனே. (௩௨)

பாகனொடுசொல்லல்.

வின்மதன்றன்னைவெல்கோடீச்சரநம்பர்வெற்பிடத்துந்
தன்மனமென்கண்வைத்தென்மனந்தான்கொண்டுதங்கித்தங்கி
முன்மதிராணீர்த்திடப்பின்பயந்தள்ளமூத்தநகை
மென்மருங்கோர்மின்செலல்பார்வலவவியன்பொழிற்கே. (௩௩)

ஆயவெள்ளம்வழிபடக்கண்டிதுமாயமோவென்றல்.

அண்டர்தம்மாதர்நடுவிந்திராணியினுபத்துறாஉம்
வண்டிருமாதிவட்கோடீச்சரநித்தர்மால்வரையிற்
கண்டிருப்போமங்கொருகாற்புணரக்கருத்தினிச்சை
கொண்டிருப்போமன்றிக்கூடியிரோமுன்குறித்திடினே. (௩௪)

வாயில்பெற்றுய்தல்.

நஞ்சிற்பொலிகண்டர்கோடீச்சரவெற்பினண்ணுமிந்த
வஞ்சிக்கொடிதன்மலர்முகமேவியவண்டுசென்றப்
பஞ்சித்தளிரடிப்பூங்கொம்பர்மீதெதிர்பாய்தலெண்ணின்
விஞ்சிக்கொடிக்கந்தக்கொம்பர்பற்றுமென்றுமேற்சொல்வதே. (௩௫)

விஞ்சிக்கொடி-பெருமையுடையவிந்தக்கொடிக்கு-பற்று-ஆதாரம்

பண்புபாராட்டல்.

கலையொன்றுவேணியர்கோடீச்சரேசர்கயிலையென்னு
மலைமுன்விளர்த்ததுமேருவுஞ்சென்னிவணங்கிநின்ற
தலையுற்றதொன்றன்றியாவுங்குறைபட்டவாமெனினிம்
முலைநகையாண்முலைக்கொப்பென்றெதனைமொழிவதுவே. (௩௬)

பயந்தோர்ப்பழிச்சல்

பந்தாடுமைபங்கர்கோடீச்சரநித்தர்பைம்பொன்வெற்பின்
வந்தாகவஞ்செயும்வேள்வெங்கணைகளைமாற்றியென்றன்
சிந்தாகுலந்தீர்த்தினிதாண்டருளியதேமொழியைத்
தந்தார்கண்மாமனுமாமியுமாகுகதாரணிக்கே. (௩௭)

ஆகவம்-போர். மாமன்-திருவினுயகன். மாமி- திருவினுஞ்சிறந்தவள்
(மீ குறுகியது.)

கண்படைபெறுதுகங்குனோதல்.

நதியுறுவார்சடைக்கோடீச்சரேசர்நளிர்வரைவாள்
மதியென்மதியையடக்கும்வண்டார்மதன்வண்டலைக்கும்

பொதியமலையத்தனிக்கான்மலையுமபுகலுமினிக்
கதியிரவெல்லைகண்டெல்லையெப்போதிங்குக்காண்பதுவே. (௩௮)

தந்ததெய்வந்தருமெனச்சேறல்.

வெந்நாககங்கணர்கோடீச்சுரேசர்வியன்சிலம்பிற்
செந்நாண்மலர்மேற்றிருவனையாளைமுன்சேர்த்ததெய்வ
மிந்நாளுஞ்சேர்த்திடுமீதல்கற்றேரொன்றுமிவர்கண்டாய்
சொன்னலெழுநெஞ்சமேசெல்குவோமந்தச்சூழ்பொழிற்கே. (௩௯)

முந்துறக்காண்டல்.

விழியொருமூன்றுடைக்கோடீச்சுரவள்ளல்வெற்பின்மத
னழகெனும்வெள்ளத்தகச்செங்கையாசையந்தூரிகைதோய்த்
தெழுதியவோவியமீதென்னவோர்மங்கையின்னுருவாய்
நிழல்செயிக்காவினங்கற்றவப்பேறெதிர்நிற்கின்றதே. (௪௰)

முயங்கல்.

விடைபட்டகேதனர்கோடீச்சுரநம்பர்வெற்பின்மலர்த்
தொடைபட்டகோதையிவள்வாயமிர்தச்சுவையினுக்குப்
படைபட்டவேலையமுதொத்திடாதுபகருமது
கடைபட்டதேயன்னதாகும்விண்மேவுகடவுளர்க்கே. (௪௧)

கோதையிவள்-கோதையுடையயிவள். கடை-தாழ்வு, கடைதல்-

புகழ்தல்.

அயனோர்ந்திடாமுடிக்கோடீச்சுரநம்பரம்பொன்வெற்பிற்
புயலினைநீரிவள்கூந்தற்குமுன்னர்ப்புகன்றிடுமுட்
பயமுற்றிருந்திடினோர்தான்சிறிதுபயமொழிந்தா
னயமுற்றிடார்கடற்போய்விழவேண்டுநவின்றனனே. (௪௨)

ஆயத்துய்த்தல்.

மியுற்றபூம்பொழிற்கோடீச்சுரநம்பர்வெற்பிடத்திவ்
வேயுற்றசாரற்றினைப்புனத்தேயன்றென்மீதுவைத்த
நேயத்தனோங்குகரணஞ்செய்தாயினிநீயகன்றுன்
னாயத்துறைமணியஞ்செய்திடுபணியாரணங்கே. (௪௩)

தலைவன்புரங்கனைச்சார்தல்.

செறிப்புறுவான்புகழ்க்கோடீச்சுரேசர்சிலம்பிடைநா
முறுப்பன்மதன்றிரிவிடைநீடுமைம்பாலுந்தொடர்பைச

சிறப்புறுகேள்விபெறுபாங்கனுக்குத்தெளிவுபெறக்
குறிப்பினுமோதும்வெளிப்படைச்சொல்லினுங்கூறுதுமே. (௪௪)

நூலிடையுநீடுகூந்தலு முடையாளுடையதொடர்பை-நன்னூலிடத்து
ஒருவன்முதலியனும்பாற்பெற்றார்பை.

பாங்கன்றலைவனையுற்றதுவினாதல்,

மன்றாடுமீசர்தென்கோடீச்சுரவெற்பவாய்மையுரை
யொன்றாதவறிடத்தொன்றினையோகடலேழுமொன்றாய்ச்
சென்றார்த்தெழினுமதியோடிரவிதிசைகெடினுங்
குன்றாதநின்புயக்குன்றமென்னோவிங்ஙன்குன்றுற்றதே. (௪௫)

தலைவனுற்றதுரைத்தல்.

விரித்துச்சொலற்கென்றனான்முடியாதன்பமேற்பகையைச்
சிரித்துச்சிதைத்திட்டகோடீச்சுரேசர்சிலம்படியிற்
சரித்திடுமென்மனப்போதகம்போம்வழிதன்னினின்றோர்
வரிக்கண்மின்னாங்குசத்தாலதனைமடக்கியதே. (௪௬)

மனப்போதகம்-மனயானை-அங்குசம்-அழகியதனம், தோட்டி.

பாங்கன்கழறல்.

கடுவமர்கண்டத்தர்கோடீச்சுரேசர்தண்கார்வரைமேற்
கொடுவெடிவேலவிருபால்வழக்குங்குறித்தெவர்க்கும்
படுவுறவோதிடுநீயின்னதென்னப்பகுத்துரைக்கு
நடுவறியாவொருபேதைகண்ணென்னிற்குநண்ணியதே. (௪௭)

தலைவன்கழற்றெதிர்மறுத்தல்

கனவல்விடபத்தர்கோடீச்சுரமன்னகன்னிநுத
லினைவண்மணிக்குழைமாமுலைபார்வையெனவுரைக்குந்
தனுவுமகரமுங்கும்பமுமீனமுஞ்சார்ந்தங்குநீ
முனமுறநோக்கிடினன்பவிவ்வாறுமொழியலையே. (௪௮)

பாங்கன்றலைவனைப்பழித்தல்.

விரையார்கடுக்கையர்கோடீச்சுரவெற்பமேவிடுமுன
னுரையார்கலைமதியோர்மாதரைப்பணிக்கொல்கியதாம்
திரையார்கவிசுற்றிடத்தேயினியொருசிற்றெறும்பிற்
றிரையாயிடுகமேருவுநீடிமயமுமே. (௪௯)

* கலை பொருந்தியமதி-தனைப்பிறைக்கும்பணி, மாதினைப்பணி.

மாலாகிநிற்பன்மலரோன்பிரமமருவிடுநம்
வேலாளிவண்விட்டவனுற்றதாற்றிறன்மிக்கவனே. (௫௯)

தலைவியைவியத்தல்

செக்கர்நன்மேனியர்கோடீச்சுரேசர்சிலம்பிலிவண்
மைக்கண்சிறுமியமால்விடந்தீர்த்திடும்வாயமிர்த
மிக்கதனைப்பொற்குடநெடுங்காமமென்வேலையினின்
றக்கணவின்பக்கரையேற்றிடுநம்மரசனையே. (௬௰)

தலைவன்றனக்குத்தலைவிநிலைகூறல்.

சுரும்புறுகொன்றையர்கோடீச்சுரேசர்சுடர்க்கிரிமேற்
கரும்புருவச்சிலைதன்னொடுநீலக்கணையுங்கொடு
பொரும்படைமாரன்றுணைபோலநின்றதப்பூங்கொடிவல்
விரும்பனெஞ்சதிருநறையூரவ்விரும்பொழிற்கே. (௬௧)

தலைவன்சேறல்.

படித்தலம்போற்றிடுகோடீச்சுரநம்பர்பைம்பொன்வெற்பின்
வடித்தடங்கண்ணிமுலையங்கையின்சொலின்வன்பகையென்
றடித்திடுமோமுன்பறித்திடுமோநின்றதட்டிடுமோ
தடித்துறுபந்துசெங்காந்தள்பைங்கிள்ளையைத்தண்பொழிற்கே. (௬௨)

தலைவியைக்காண்டல்.

செந்நெல்விளைவயற்கோடீச்சுரசித்தர்திண்சிலம்பின்
மன்னவபேரின்பநீடுமுதிவன்முன்வாசுகிநற்
பன்னகம்பூட்டித்தனமலைமேலெனப்பன்னுவள்போற்
பொன்னிறமால்வரைகாட்டிநிற்கின்றனள்பொற்றொடியே. (௬௩)

வாசுகிநற்பன்னகம் - வா*சுகி*நற்பல்*நகம்.வாசுகியெனும்பாம்பு
நிறம்-மார்பு,ஒளி.

கலவியின்மகிழ்தல்.

சலங்காத்தவேணியர்கோடீச்சுரேசர்தடத்தரத்தி
லலங்காவெழுத்தசைசீர்மேவுபந்தமடிதொடைகொண்
டிலங்காவளருமுறுப்பியல்பாவுற்றிடுமினைய
நலங்காமுறுகாரிகையின்பமீங்கெய்திநண்ணினமே. (௬௪)

அசையாததொய்யிலெழுத்திணங்கிய சிறப்புப்பொருந்தியபந்துபோன்றதனத்தினழகும் மடித்தமாலை பூண்டவுறுப்பாகியமார்பும்பொருந்தியமடந்தை-எழுத்துமசையுஞ்சீருந்தளையுமடியுந் தொடையுங்கூறுமுறுப்பியலும் பாவினியலும்பொருந்தியகாரிகை யாகியநூலின்பம்.

புகழ்தல்

திங்கட்கொழுந்தணிகோடீச்சுரேசர்சிலம்பிலிவ்
ளங்கத்திற்காலமு கொத்திடுங்கஞ்சமனையழகு
மங்குலைச்சார்ந்துறைமின்னுக்குமற்றைவடிவுகளுக்
இங்கெப்பொருளினுங்காணேமுழுதுமியையவதுவே (௬௫)

பாங்கியோடுவருகெனப்பகர்தல்.

படையுற்றபூதத்தர்கோடீச்சுரேசர்பனிவரைநா
லடையுற்றிடுநல்லனமேகின்பாங்கிக்கினியொளித்து
நடையுற்றிடுதனலனன்றவளொடுநாளைவந்திக்
கடையுற்றிநின்னையன்னுடாநானெதிர்கைக்கொளவே. (௬௬)

பாங்கிற்கூட்டல்.

எனைத்தேடியாள்சிவன்கோடீச்சுரவெற்பிலெய்திநின்னைச்
சுனைத்தேடியாங்குறுங்காமனைத்தேடிடுந்தோழிமுன்னீங்
குனைத்தேடினேனென்னமொன்றேதியன்னளொடொன்றிடுநீ
கனைத்தேடியைவண்டுகொம்போதிபாடுங்கதுப்பணங்கே. (௬௭)

பாங்கியையமுற்றோர்தல்-

கறையுறுகண்டத்தர்கோடீச்சுரசித்தர்சார்வரைமே
லுறையுமிம்மாதந்தமாதவர்போன்முன்னுணவொழித்தாண்
மறைபுகல்வாளமமனைவெறுத்தாளுடல்வாட்டமுற்று
ளறையுமிவையிதனாலுற்றனவென்றறிந்திலமே. (௬௮)

ஐயந்தீர்தல்.

அரியமறைப்பொருடன்னைமுன்னாலவருக்காலடியிற்
றெரியவுணர்த்தரன்கோடீச்சுரமன்னதேமொழியின்
சரியைகிரியைகளையந்திரிபின்மைசார்ந்தினிது
விரியுறும்போதோரிறையோகஞானம்விளக்கின்றவே. (௬௯)

இறையோகஞானம் ஓரிறைவனதுபுணர்ச்சியுண்மையறிதல்.

பிறைதொழுகென்றல்.

அணிதாங்குகோடீச்சுரேசர்தங்கட்பொறியாதலினுன்
மணிதாங்குவேலைமகிழ்வுற்றதாலுயர்வானகத்திற்
கணிதாங்குடுக்களின்காதலனாற்பிறைகந்தனுக்கும்
பணிதாழ்கருங்குழன்மாதேபணியிற்பலன்றருமே, (௭௰)

கட்பொறி-கண்ணிலெழுந்ததீப்பொறி, கண்-மணி பொருந்தியவேல்-வேலை, சமுத்திரம். கார்த்திகையுடுக்களின்-பிள்ளை - நட்சத்திரநாயகன்.

சுனைவியந்துரைத்தல்.

தோடுறுங்காதினர்கோடீச்சுரநம்பர்துய்வரைநீ
யாடுறும்போதிற்பிறழும்பணிகளவைதிருத்திக்
கோடுறுநெற்றித்திலகமுந்தீட்டிக்குறுவெயர்நீங்
தேடுறுங்கோதைநின்கோதையிற்சூட்டியதெச்சுனையே. (௭௧)

சுனைநயப்புரைத்தல்.

நங்கந்தரத்தருமைகளிந்திடுமத்தர்நஞ்சமரும்
வெங்கந்தரத்தர்தென்கோடீச்சுரசித்தர்வெற்பிடத்திற்
சங்கந்தருமுத்தந்தந்திடுமேலென்றனையுமளி
யங்கந்தருவமிசைக்குஞ்சுனைக்கழைத்தேகணங்கே, (௭௨)

கந்தருவம்-பண், எண்வகைமணத்திலொருமணம்.

தகையணங்குறுத்தல்.

மருமலரோன்பணிகோடீச்சுரேசர்வரைவருநீ
திருமகளோமதன்காதலியோவெங்கடேமொழித
னுருவுளையன்னள்புனலாடற்கேகினளூற்றிடுஞ்சற்
றிருவிருமேவிவிளையாடலாமிங்கிருவிருமே. (௭௩)

நடுங்கநாட்டம்.

ஆரூர்மழுவினர்கோடீச்சுரவெற்பிலாரணங்கே
பாரூர்வதுவோபறப்பதுவோவெம்பகையிடத்திற்
போரூர்செங்கோடுறுவன்கொடுங்குன்றம்புனையுமொரு
காரூர்கைம்மாக்கொளவேலெறிந்தானொருகாவலனே. (௭௪)

தலைவன்பாங்கியையிரவுவலியுறுத்தல்.

சருதடியார்கட்குயர்வரநல்குங்கருணையினார்
பருவரைவில்லினர்கோடீச்சுரவெற்பிற்பாங்கியெனுந்
திருவிங்கிருக்கின்றனளிவட்போற்றினச்செல்வநல்கு
மருவினச்செல்வமுன்வேண்டின்பமெய்தும்வழியிதுவே. (௭௫)

பாங்கியையூர்வினாதல்.

மதியிருக்கும்வடிவாள்போலிருக்கும்வரிவிழியாய்
நதியிருக்குஞ்சடைக்கோடீச்சுரேசர்நகத்துறுநின்
பதியிருக்குந்தலம்வானோபுவியோபகர்தியிங்குக்
சதியிருக்குந்தலந்தேடிடுவேன்சென்றுகண்ணுறவே. (௭௬)

Dr. U. V. S. IYER LIBRARY
23496
MADRAS-90

பெயர்வினாதல்.

கந்தனைத்தந்தவர்கோடீச்சுரவெற்பிற்கண்டவுனை
யிந்திரையென்றனன்யானெனதுள்ளமிரதியென
மந்தரர்கோன்றுணையென்றார்சிலரிதையாய்ந்திடுவான்
வந்தனனின்பெயரிங்கெனக்கோதுகவாணுதலே. ([illegible])

மான்வினாதல்.

படிபுகழ்சீரினர்கோடீச்சுரத்தெம்பரமர்வெற்பின்
முடிமிசைவேட்டத்தினெய்திடுமென்கணைமுன்னர்த்தப்பிப்
பிடியெனவோர்மானடைந்தது நானும்பிடிபிடியென்
றடியுறவந்தனன்கானேன்கண்டாற்சொல்லணியிழையே. (எஅ)

வழிவினாதல்.

பெருவானவர்புகழ்கோடீச்சுரேசர்பிறங்கன்மின்னே
கருவாய்வனத்தைக்கடந்தெளியேனுடகளிப்பினொடு
மருவாய்பொழில்சூழ்சிவபுரங்கூடும்வழியுனது
திருவாய்மலர்ந்திங்கிதுதானெனவொன்றுசெப்புகவே. (எகூ)

கருவாய்வனம்-கருநிலக்காடு, கருவிற்படும்பிறவிக்காடு.

சிவபுரம் - சிவலோகம்;ஒருதலம்.

மொழிவினாதல்.

ஆலார்மிழலைக்கோடீச்சுரவள்ளலம்பொன்வெற்பின்
பாலாரிடத்திற்சிலர்திருவாய்மொழிபண்ணிறைந்தேன்
சேலாம்வரிவிழியாயித்தலத்திற்செவியுணர
மாலாமெனக்குன்றிருவாய்மொழியொன்றுவந்துரையே. (அ௰)

இவர்மனத்தெண்ணமியாதெனத்தேர்தல்.

பையுற்றசூற்படைக்கோடீச்சுரேசர்வரையிலிவர்
மையுற்றவேழம்பல்கேழலெய்தோமெனவன்மைசொல்வார்
கையுற்றதுதனுவாயுற்றதுபொய்கருத்துற்றதூஉ
மெய்யுற்றதூஉமறியேமெவரோவிந்தவித்தகரே. (அக)

எண்ணந்தெளிதல்.

குழைகாட்டுங்காதினர்கோடீச்சுரேசர்குவட்டிலிந்த
நுழைகாட்டிடையிவர்வில்லோடம்பின்றிநுழைந்துவந்தோர்

மழைகாட்டியமதமாவந்ததோவெனுமாற்றம்பொய்கைத்
தழைகாட்டிநங்குலமானைக்கொண்டேகிடச்சார்ந்தனரோ. (௮௨)

இருவருமுளவழியொருமையிற்போதல்.

இறங்விடை யூர்தியர்கோடீச்சுரேசர்திருவருளு
முறுமுனர்நாஞ்செய்தவப்பேறும்போலிங்கொருமுகிலிற்
செறியிருமின்போலரசியும்பாங்கியுஞ்சேர்ந்துறைந்தார்
குறுகிவின்மாரன்கொடுங்கோனடாத்துதல்கூறுவமே. (௮௩)

அவ்வகைகெடுதியுண்மனம்வினுதல்.

திங்கட்கொழுந்தணிசோடீச்சுரேசர்சிலம்படிக்கட்
டங்கியவென்மனமாய்கொருகாலென்றனையறியா
தெங்குஞ்சரிக்குமுடன்மீணடிடுமெஞ்சியிப்பொழுதீண்
டிங்கடம்பாலுற்றதோமங்கைமீருண்மையோதுமினே. (௮௪)

ஒழிந்ததுவினுதல்.

மாலோர்புறங்கொணடகோடீச்சுரேசர்வரையிடைநீ
ராலோலமென்னுங்குரலேவழிமறித்தன்னமன்னீர்
பாலோடுங்கிள்ளைகளெல்லாம்வருவித்துப்பைந்தினையின்
மேலோங்கிடுகுரலெல்லாமினிதுவிருந்திடுமே. (௮௫)

பாங்கியெதிர்மொழிகொடுத்தல்.

மலையாயவில்லினர்கோடீச்சுரேசர்வரையிலுன்கைத்
தலையார்கணைக்கும்விழிக்குமனத்திற்குந்தப்பியெங்கு
நிலையாதிங்குற்றகலைகண்டிலேமையநீடுநின்போற்
கலையாய்வதற்குப்பொழுதுளதோபுனங்காப்பவர்க்கே. (௮௬)

இறைவனை நகுதல்

இழைவளர்மார்பினர்கோடீச்சுரேசரிமவரைமேற்
கழைமதன்போதுகொண்டெய்திடலோர்ந்திவர்கான்விலங்கைத்
தழையதினெய்திடவெய்தினரீண்டித்தழையதனுன்
மழைமதவேழங்கயமாமுழையுமறிதருமே. (௮௭)

பாங்கிமதியினிலவரவர்மனக்கருத்துணர்தல்.

நிறக்குந்தினைகொண்டுகோடீச்சுரநித்தர்நீள்வரைக்கட்
பறக்குஞ்சுகமிவள்பாராளிவன்சுகம்பார்க்குமிவன்

மறக்குஞ்சரத்தைமறந்தின்னவள்விழிவன்சரத்தை
யுறக்கணனூறுமிவர்வேட்டமுங்காப்புமுணர்வுற்றவே. (௮௮)

தலைவனுட்கோள்சாற்றல்.

சிற்றேரிடையங்கர்கோடீச்சுரேசர்திருவருண்முன்
பெற்றேன்சிந்தாமணிவேண்டினுநீவிர்பெறக்கொடுப்பேன்
பொற்றேரினையச்சுறுத்தல்குலீரிங்குப்போதரும்பாற்
குற்றேவல்செய்யும்விருப்பினுற்றேனென்னுட்கோளிதுவே. (௮௯)

பாங்கிகுலமுறைகிளத்தல்.

காரூர்களத்தரன்கோடீச்சுரமெனக்கற்றவர்சொல்
பேரூருனதிடஞ்சீறூரெமதிடம்பேருறநீ
பாரூர்முழுவதுங்காப்போனெங்காவலிப்பைம்புனநீ
கூரூர்படைமன்னனுங்குறமாதர்குறித்தருளே (௯௰)

தலைவன்றலைவியையுயர்த்தல்.

நங்கேதந்தீர்த்தருள்கோடீச்சுரநம்பர்நாட்டினிடைச்
செங்கேழ்வண்டாமரைசேற்றெழுங்கள்ளியிற்சீர்கொளகி
லிங்கேயுதித்திடுமெங்கேயுதிக்கினென்னேதில்பொருள்
சங்கேயெனுமகளவுங்கள்பைம்பொன்னுமத்தன்மையளே. (௯௧)

பாங்கியறியாள்போன்றுவினாதல்.

நனையாடுதண்பொழிற்கோடீச்சுரநம்பர்நல்வரைமேற்
சுனையாடுநர்பலர்பந்தாடுநர்பலர்சூழ்ந்தெழிலம்
மனையாடுநர்பலரின்னாருளிங்ஙனமவாள்விழிகொண்
டுனையாடுவித்தவளார்மன்னவாவுண்மையோதுகவே. (௯௨)

தலைவனிறைவிதன்மையியம்பல்.

நாகமங்கத்திற்புனையும்புராணர்நவின்மறையார்
பாகமங்கைக்கருள்கோடீச்சுரத்தெம்பரமர்வெற்பி
லாகமம்பொன்னுருக்காவியங்கண்ணிடையாய்மதனால்
சோகமங்குற்றிடவென்னையிவ்வாறுசெய்தாமொழிக்கே. (௯௩)

பாங்கிதலைவியருமைசாற்றல்.

உன்னுமப்பொன்னிங்கெளிதினுறுமையவுன்றனக்குப்
பொன்னுமின்பந்தருந்தேருமுரம்பெறுபோர்க்களிறு

மின்னும்பிறவுமெங்கோமேச்சுரேசரெழிற்பதத்திற்
பன்னுந்துதியும்பரிவுமுள்ளோர்க்குப்பலிப்பனவே. (௬௪)

தலைவன்றலைவியின்றியமையாமையியம்பல்.

முன்னாவ்வேதனுங்காணுமுடியினர்முத்தநகை
மின்னமர்பாகத்தர்கோமேச்சுரயானவின்றுதலாய்
கன்னற்சிறுவிலைதன்னுன்மெலிந்திடிக்காலத்துங்க
ளன்னமில்லாவிடிற்சற்றுமில்லாதென்றனாருயிரே. (௬௫)

கன்னற்சிறுவிலை-சிறியகருப்புவின்னுயகன்,நாழிகைதோறுங்
குறைகின்றசிறுவிலைக்காலம்.

பாங்கிநின்குறைநீயேசென்றுரையென்றல்.

மின்னூற்றண்மதிக்காந்தமென்கல்லகமேவுமெழி
லுன்னூறுவண்ணமகிழ்முகங்காணினுருகுமன்றிப்
பொன்னூறுகொன்றையர்கோமேச்சுரேசர்பொதியவெற்ப
வென்னுரையாலுருகாதேகிநீயேயிசைநினைவே. (௬௬)

தலைவன்பாங்கியைப்பழித்தல்,

மட்டார்மலர்பொழிற்கோமேச்சுரநித்தர்வண்சிலம்பிற்
பெட்டார்கரையேற்றெனவிரந்தோரைப்பெருகுவெள்ள
நட்டாற்றிடைவிடுவாரின்மின்னேநினைநம்பெனைக்கை
விட்டாயுன்வஞ்சியெனும்பேர்ப்பொருளைவிளக்கினையே. (௬௭)

பாங்கிதலைவிபேதைமையூட்டல்,

தண்ணார்கமைக்கையர்கோமேச்சுரவெற்பசாற்றமெங்கள்
பெண்ணாரமுதனையாண்மிகப்பேதைபெரிதுகந்து
கண்ணாடிநீழலொடுபேசுவாள்கையிற்பாவையையீ
துண்ணாதெனென்பளெண்ணாளுன்னுள்ளத்துறுதுயரே (௬௮)

தலைவன்றலைவிமூதறிவுடைமைமொழிதல்.

செங்கையநளினர்கோமேச்சுரேசர்சிலம்பிடைத்தன்
னங்கயற்கண்கொண்டெனக்குமைக்காட்டியனங்கனுக்கு
மிங்கயலின்னவன்போகவிடேலென்றிசைத்ததிரு
மங்கையைப்பேதையென்றோதலெவ்வாறமடந்தையரே. (௬௯)

பாங்கிமுன்னுறுபுணர்ச்சிமுறையுறக்கூறல்.

கொற்றவமுன்னிற்சமைவுற்றவன்னத்தைகக்கொண்டிடின்று
முற்றிடநானென்னைகோடீச்சுரவள்ளலோங்கருளான்
மற்றிருவாரமணிமுடியாதிமருவுமின்பம்
பெற்றிருப்போர்கட்குவேண்டுமோபின்பிறரருளே. (௰)

தன்னிலைதலைவன்சாற்றல்.

காதார்கயற்கண்ணிகோடீச்சுரநம்பர்காசினின்றிப்
போதாரளகக்குமரியுற்றூடட்புகனெறிக்கண்
மீதாம்வடமலையாதிகளோக்குற்றுமேவினன்முன்
னீதானஞ்செய்திடினும்படிவேனச்சநெஞ்சிலுற்றே. (௰௧)

போதாரளகக்குமரி-மலர்பொருந்தியகூந்தலுடையபெண், அறியநீர்வடி வாகியவிந்நதி, ஆட-மூழ்க, புணர. நெறிக்கண்-வழியில், நெறித்தகண். வடமலை-வடமணிந்தமுலை, நீதரின், மூழ்குவன், புணர்வேன்.

பாங்கியுலகியலுரைத்தல்,

கார்கொண்டவாணமாதிகணீக்கிக்கலந்திடன்பர்க்
கேர்கொண்டவின்பருள்கோடீச்சுரவள்ளலேமவெற்ப
வார்கொண்டபூணவையுறுகன்னிகையைவரைவுபெற
நார்கொண்டிசைப்பதுமாலையதாமிந்தநன்னிலத்தே. (௰௨)

நீவரைகென்றல்.

வன்னிக்குமுன்னர்தமரோடெமருமகிழ்வுபெற
மன்னித்தலம்புகழ்கோவேதாளமும்வச்சிரமும்
பொன்னித்திரையெறிகோடீச்சுரநம்பர்பொற்சிலம்பின்
கன்னிப்பிடியைவரைந்தணைப்பாய்புயக்கம்பத்திலே. (௰௩)

தலைமகன்மறுத்தல்.

ஆவாவெனக்கையிளைத்தாற்றழுங்குமவரையொரு
நாவாய்செய்தேறிக்கொடுகரைவாவெனுநண்பரொத்தாய்
தேவாதியர்பணிகோடீச்சுரேசர்சிலம்பணங்கை
நீவாகுடன்வரைந்துன்மாலகற்றென்றுநேரிழையே. (௰௪)

பாங்கியச்சுறுத்தல்.

படமன்னுபூணினர்கோடீச்சுரவெற்பின்பாலெம்முன்னர்க்
கடன்மன்னுமாவிற்களித்துவில்லேவிதுகண்டனரே

வடன்மன்னுமிக்குன்றவானர்கடாமையுமறையவுனே
விடமொன்னவந்துவளைந்துகொள்வாரிந்தவேலையிலே. (௱௫)

தலைவன்கையுறைபுகழ்தல்.

மெய்யேந்துமிம்மணிகோடீச்சுரத்தர்வெற்புறைவீர்
மையேந்துவரியொளிநீள்கயிலைவரணைகம்பை
யையேநிவற்றினிடையதிதன்பேரறையுமுன்னர்க்
கையேந்துவானிந்திரன்கொணர்ந்தேனுங்களுக்கெளிதே- (௱௬)
உவரி, கயிலை, வரணை, கம்பை. இவற்றிடையெழுத்தாகிய வயிரம்.
இதன்பேர்.

பாங்கிகையுறைமறுத்தல்.

மேலோர்புகழ்பரன்கோடீச்சுரவள்ளல்வெற்புறைவோ
மேலோம்பிறரிடையாங்கொடுப்போமிவ்வெழின்மணித்தார்
வேலோடிலவுமரசேயுனக்காமிலைந்திடுநின்
பாலோர்க்களித்திடுதவுனைப்பாடியபாவலர்க்கே, (௱௭)

ஆற்றாநெஞ்சினோடவன்புலத்தல்.

மழைநிகர்கண்டத்தர்கோடீச்சுரேசர்வரையினெஞ்சே
யுழைநிகர்நோக்கியரேலாதுவாடென்கையொண்டளிரைத்
தழையுறுமுன்னர்க்குழையெனமேலெவர்சாற்றினரோ
குழைவுறுகின்றதிதுநீகுழைவதென்கூறுகவே, (௱௮)

பாங்கிதலைவனையாற்றுவித்தகற்றல்.

ஒருவிடிப்போதிதுகாலமன்றெல்லையுதையத்துவா
மருவிநின்மாலையமன்னவன்றோடன்மனந்திருத்தி
நிருவிகற்பத்தினர்கோடீச்சுரேசர்நெடுவரைமே
லருவியின்மாழுலைமீதுறவாக்குவனுமிதுவே (௱௯)

கிழவோன்மடலேறுபொருளெனமதித்தல்.

பூவேறினனுமலையேறினனுமுன்போற்றிசைப்பச்
சேவேறிவந்தருள்கோடீச்சுரேசர்சிலம்பினிடை
நீவேறுகண்ணிக்கலையனெஞ்சேயிங்குநீடுமடன்
மாவேறிமெள்ளப்பிடித்திடுவோமந்தவன்குயிலே. (௱௰)

வேறுகண்ணிக்கு-அலையாதே, வேறுநினைந்துவாடாதே
மடன்மாவேறி-பூவுடையமடலில், பனைமடலாற்செய்தபரியிலேறி.

உலகின்மேல்வைத்துரைத்தல்.

கோவார்நுதலினர்கோடீச்சுரவெற்பிற்கூறெளிதின்
மேவாமகளிர்கண்மேவுறுவானெஞ்சின்மேவுற்றுளோர்
பாவாயவர்கடமாவணைத்தூடுபனையையொரு
மாவாகச்செய்துநடத்துவரீதுமனுமுறையே. (௱௰௧)

அதனைத்தன்மேல்வைத்துச்சாற்றல்.

விடமுறுகண்டத்தர்கோடீச்சுரமன்னமின்னினையோர்
படமதிலீதென்னெழுத்தென்றெவரும்பகுத்துரைக்கத்
திடமுறத்தீட்டிக்கரங்கொடுநாளைத்தெரித்தபனை
மடன்மிசைநும்மூர்த்தெருமேல்வருவேன்மதிநுதலே. (௱௰௨)

பாங்கிதலைமகளவயவத்தருமைசாற்றல்.

விழியுறுபாலத்தர்கோடீச்சுரமன்னமின்றிருவாய்
மொழியுறுகாஞ்சிதிகழுறுசீரங்கமுந்திவற்றை
யெழிலுறுமன்னவெழுதுவையோவுய்த்தெழுதுவையேற்
கிழியெனக்கண்டோருணையாதெழுதக்கிழிதனையே. (௱௰௩)

தலைமகன்றன்னைத்தானேபுகழ்தல்.

வண்ணவெண்ணீற்றரன்கோடீச்சுரவெற்பின்மாதனையோர்
விண்ணுக்குருவிலையென்பாரதுவுண்டுமேலதன்க
ணெண்ணுஞ்சுனையுண்டதிலொருதாளிருநாண்முகையுண்
டெண்ணினைவசொல்லன்றெழிதித்தருவனிங்கிவ்வண்ணமே (௱௰௪)

மாதனையோர்-உலகத்தோர், மாதினிடையாகிய.

விண்ணுக்கு-விசும்பிற்கு. அதுவுண்டு-அதுவுளதுமெய்தான்.

பாங்கிபருளியல்கிளத்தல்.

சூலாயுதத்தினர்கோடீச்சுரவெற்பிற்றோன்றிநீ
சேலாயகண்ணிபொருட்டினித்தாலஞ்சிதைக்கிலிதன்
மேலாயவண்டம்பலபோம்பலவுயிர்வீதலுறு
மாலாயவுன்னையுருத்திரனுமென்பர்மற்றயனே. (௱௰௫)

பாங்கிகொண்டுநிலைகூறல்.

ஒத்தேநின்னல்லவெல்லாமிசைப்பேனெவ்வுலகினுக்கும்
வித்தேயெனும்புகழ்க்கோடீச்சுரநித்தர்வெற்பின்மலர்க்
கொத்தேறியமுடிப்பொற்பேறிடுமென்கொடியிடைமே
வத்தேன்மறுத்திடினீயும்மடலேறனியரசே. (௱௰௬)

தலைவியிளமைத்தன்மைபாங்கி தலைவற்குணர்த்தல்.

மழுத்தடங்கையினர்கோடீச்சுரவெற்பமற்றிவணீ
யெழுத்திசையாதுமுன்சொற்பொருள்கொள்ளாதியாப்பணியின்
விழுத்தகவோதிமுடியாவிப்பேதைகண்மேவுதற்கென்
வழுத்துதிமென்மைத்தனமிலைக்கூடமதித்திடினே (௱௰௭)

தலைவன்றலைவிவருத்தியவண்ணமுரைத்தல்.

உம்பர்கள்போற்றிடுங்கோடீச்சுரேசர்தமோங்கலில்வே
ளம்பலரான்மெலிவேனைத்தனவரும்பாலும்வலி
திம்பரலைத்திட்டதாலவ்விளங்கொடியேல்லையுறில்
வம்புசெயத்தக்கதேசிறிதேனும்வனமுலையே. (௱௰௮)

பாங்கிதலைவிசெவ்வியருமைசெப்பல்.

ஒழங்காரணன்பரன்கோடீச்சுரமன்னவஞ்சியென்றே
கழங்காடிலளெழிற்பந்தாடிலளக்கலியறியேன்
முழங்காற்கழுன்மன்னவாவுன்னகவலக்கண்மொழியத்
தொழுங்கால்விருத்தமுறும்பதமன்றிதுசொல்லுதற்கே. (௱௰௯)

தலைவன்றலைவிசெவ்வியெளிமைசெப்பல்.

பார்கேட்டகீர்த்தியர்கோடீச்சுரேசர்பனிவரையி
னீர்கேட்டவர்க்கருள்கார்தனைநோக்கினெடிதுவக்கு
மோர்கேட்டிவாங்கியவம்மயிலும்மயிலென்றணையுற்
பேர்கேட்குமுன்னரனமேகளித்திங்குன்பின்வருமே. (௱௨௰)

பாங்கியென்னைமறைத்தபின்னெளிதெனநகுதல்

நெய்யுந்திரியுந்தகளியுந்தீயுமுன்னேர்ந்துதம்மிற்
செய்யுஞ்சுடராய்த்திகழ்வும்பின்றாண்டலுறுத்திறமு
மையகண்டென்னையென்றொகவளின்பத்தடைவெண்ணினாய்
வையம்புகழ்பரன்கோடீச்சுரவெற்பில்வாய்ப்பிதுவே. (௱௨௧)

அந்நகைபொறா தவன்புலம்பல்,

மங்கைநல்லாயெழிற்கோடீச்சுரநம்பர்மால்வரைமேற்
றங்குறுவேண்மலராலெறிந்தானதுதண்புனத்தோர்
பைங்கிளிமேற்பட்டுருவியென்னெஞ்சினும்பட்டலைத்த
திங்குனக்கோதினனீநகையாலெறிந்தீர்ந்தனையே. (௱௨௨)

பாங்கிதலைவனைத்தேற்றல்.

மேலும்பர்போற்றரன்கோடீச்சுரவெற்பின்மேவுகைவிற்
காலுறுகற்கட்கச்சிங்கமேயந்தக்கன்னியுன்றன்

பாலுறச்செய்வேணிராசியமாகப்பருவரல்போக்
கேலும்வகைமுயன்றுன்முடியாதென்னிந்தலத்தே. (௱உ௩)

பாங்கிகையுறையேற்றல்.

நாதாந்தமேவரன்கோடீச்சுரவெற்பினண்ணுமெங்கள்
போதார்குழலிக்குன்கையுறையோதினன்போவிங்கென்ன
வாதாவெனறுளினிப்போதுமென்றேயிங்குவந்தனன்யா
னீதாவுலகுக்குத்தாதாவெனச்சொன்னெந்தகையே. (௱உ௪)

தலைமகனுற்றல்.

பொன்மாலையன்பகழ்கோடீச்சுரநம்பர்போற்றிடுநஞ்
சொன்மாலையன்புறக்கொள்ளுதல்போலிந்தச்சோலைமணி
வின்மாலையன்னளுக்கேற்றனணமீதுமெலிவுதரு
வன்மாலையன்னதையாற்றிடுமாலையைமாற்றுவளே. (௱உ௫)

பாங்கியிறைவிக்கவன்குறையுணர்த்தல்.

சித்திரபானுசுபானுமதியெனுஞ்சீர்நயனர்
சித்திரமாநகர்க்கோடீச்சுரவெற்பிற்றேர்ந்தயன்செய்
சித்திரமேயோர்சுகங்காண்கிலனுந்திகழொருவன்
சித்திரமாந்தழைகைவாடவாடித்திரிந்திடுமே. (௱உ௬)

தலைவியறியாள்போன்றுகுறியாள்கூறல்.

மன்றிடையாடல்செய்கோடீச்சுரேசர்மனத்தருள்கொண்
டன்றுறுபத்திரயோகிக்கறந்தவமாமெனவையு
மொன்றொருகோடியதாமித்தலத்திலுறைந்திடிங்கே
யென்றுரைத்தாரவனவ்வாறிருந்தனனேந்திழையே. (௱உ௭)

பாங்கியிறையோற்கண்டமைபகர்தல்,

சைவாகமஞ்சொன்னகோடீச்சுரேசர்தடத்துநம்பா
லவ்வாரணமுங்கலையுமுரையுடனன்றுகந்து
செவ்வாவினுபவரின்றேதுகேட்குந்திறத்தினரோ
மைவாழ்பொழிலிடைவந்துநிற்கின்றனர்வாணுதலே. (௱உ௮)

தலைவிபாங்கியைமறைத்தல்.

விழியுறுபாலத்தர்கோடீச்சுரநம்பர்வெற்பணங்கே
வழிநடப்போரவ்வழிகேட்பர்தாமங்குவந்தவகை

மொழிவரிவையுமற்றெனைக்குறித்தோவொன்றுமுன்னலைநீ
பழிதருமோநங்குலத்தினுக்கீதென்பகர்ந்தனையே. (௱௨௯)

பாங்கியென்னைமறைப்பதென்னெனத்தழாஅல்

ஏறூர்கொடியரன்கோடீச்சுரமன்னவேந்திழைமெய்
வேறுவியொன்றுவிருந்தேமிருவருமேலதுவு
மாறாகவெண்ணணியின்றென்றேபுராணவசநம்விட்டுத்
தேறுமறைகூறுதிமெக்கிதுசிறந்ததன்றே, (௱௩௰)

பாங்கிகையுறைபுகழ்தல்.

மறியுறுகையரன்கோடீச்சுரவெற்பின்மன்னர்தந்த
முறியிதுன்காதிற்கணிகுழையாம்பின்னுமொய்குழற்கு
நறியதுவாய்மேவலங்கலுமாங்கைக்கொணற்கிளியாஞ்
சிறியமருங்கினுக்காடையுமாமினசத்தேமொழியே. (௱௩௧)

தோழிகிழவோன்றுயர்நிலைகிளத்தல்.

மறவினைதீர்த்தருள்கோடீச்சுரேசர்வரையில்வெயி
லுறவினைவுற்றிடுபேடையைத்தன்சிறையூடணைத்த
புறவினைநோக்கியகவினைதீர்ந்தப்புரவலர்நீ
ணறவினைமேவலர்க்கோதைநின்றார் சொன்னவிவடைந்தே. (௱௩௨)

பாங்கிமறுத்தற்கருமைகூறல்

தையனல்லாய்சிவன்கோடீச்சுரவெற்பர்சார்ந்துனைங்
கொய்யுந்தழைதந்தக்காவுமெலிந்ததுகொய்தவர்தங்
கையுமெலிந்ததவர்க்கிசைவாம்பதங்கட்டுரைத்தென்
பொய்யுமெலிந்ததுநாளுமெலிந்துன்கட்போந்தனனே. (௱௩௩)

பாங்கிதலைவன்குறிப்புவேறாகநெறிப்படக்கூறல்

சேய்தந்தநாட்டத்தர்கோடீச்சுரநித்தர்திண்சிலம்பிற்
காய்தந்திடும்பனைமிதேறினல்லகனிதருமென்
றாய்தந்தகோற்றொடியாங்கிசைத்தாரன்பரன்னவர்தம்
வாய்தந்தசொல்லிதறியேனவர்தமனக்கருத்தே. (௱௩௪)

பாங்கிதலைவியைமுனிதல்.

மின்னேயசெஞ்சடைக்கோடீச்சுரவள்ளல்வெற்புறநம்
முன்னேயந்தன்னைக்குறித்துரைத்தேனிம்மொழியனைமே
பின்னேயதுசென்றதோர்க்கிலனிவெண்பிழைபொறுத்தி
டென்னேயமாதருக்கோதிநீநின்னுளக்கருத்தே. (௱௩௫)

தலைவிபாங்கியைமுனிதல்;

அனைத்துக்கிசையடக்குமின்னேயின்றளியனுன்றன்
மனத்துக்கிசையடங்கிடவோவுண்மருவறும்
மினத்துக்கிசையடங்கிடவோசொல்லினத்துக்கெனுக்
கனத்துக்கிசைகண்டர்கோடீச்சுரேசர்கதிர்வரைக்கே. (௱௩௬)

தலைவிபாங்கிகையுறையேற்றல்.

ஓணத்தவன்போற்றவிட்டத்தன்கேட்டையுருனடியார்
காணத்தகுபரன்கோடீச்சுரமன்னகாரிகைநா
ணுணத்தகுவதெனினுமறேனின்சொனல்லதிது
பூணத்தகுவதென்றுய்தருவாய்நின்கைப்பூந்தழையே, (௱௩௭)

தலைவிகையுறையேற்றமைபாங்கிதலைவற்குணர்த்தல்,

தன்னொத்திடுசிவன்கோடீச்சுரவெற்பசார்ந்தளித்தேன்
முன்னொற்றியூர்வரிநாட்டத்திலோங்குமுதுகுன்றமா
மென்னுந்தனத்தணைத்தொண்முல்லைவாய்முத்தமீந்தனள்பின்
மன்னத்தகையமயிலையொப்பாளுன்றன்மாந்தழைக்கே, (௱௩௮)

பாங்கிதலைமகற்குக்குறியிடங்கூறல்.

ஆனியிலம்பலத்தாடிநல்லாவணியார்கொடியான்
காணியல்கொன்றையன்கோடீச்சுரமன்னகார்வரைக்கண்
வானியல்காவொன்றதிலேசுகமுண்மருஉமதுவே
தேனியல்கோதைவிளையாடிடமுங்கிவசவதிலே. (௱௩௯)

பாங்கிகுறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

அலைகொளுமாவினின்மெய்ம்மணங்கூடுறவாடிவெம்மு
விலைகொளுஞ்சூலத்தர்கோடீச்சுரேசரிமையமென்னு
மலைகொளமென்சொற்பயிற்றிமற்றீண்டுவரவருதி
சிலைகொளும்வாளிநிகர்விழிவாணுதற்சிற்றிடையே. (௱௪௰)

குறியிடத்துய்த்துநீங்கல்.

சேவலர்கேதனர்கோடீச்சுரவெற்பிற்சேரவுறு
நாவலர்தம்மைநின்றிங்குநின்கைக்கொள்கயத்தொண்கஞ்சப்
பூவலர்நீலமெலாமங்குநான்றனிப்போய்க்கொணர்கே
னேவலரின்றிமதனெங்கச்செய்குவனேந்திழையே. (௱௪௧)

இறையோன்குறியிடத்தெதிர்ப்படுதல்,

இறமாரிவ்வேனிலிற்கோடீச்சுரேசர்சிலம்பிலென்மேன்
மறமாரிகல்செய்மதன்றனையோட்டிமருவெனக்குன்
னிறமார்மணிமுடிவேய்ந்தரசிந்திடநீடுநினைந்
துறமாதுநீயிவண்காணேவவந்ததின்றேருங்கருளே. (௱சஉ)

புணர்ச்சியின்மகிழ்தல்,

மீனந்தநோக்கிமுன்னுமெய்தகத்துயர்வெப்பகல
வானந்தமேவிமனவாசகத்துமதிப்பரிதாய்த்
தேனந்தமார்கொன்றைக்கோடீச்சுரேசர்சிலம்படிகு
மானந்தவெள்ளத்திருவோமுங்கைகலந்தாடுவமே, (௱சங)

புகழ்தல்,

நதிவார்சடையரன்கோடீச்சுரவெற்பினல்லதின
மிதுவாகுநாளிங்கணைந்துநின்பேரின்பமெய்தலுற்றேன்
மதிவாணுகலாய்பொருந்துமுன்னத்தமருவலன்றித்
திதிவாரயோககரணங்கண்மேலுந்திடமுற்றவே (௱சச)

அத்தம்-கை, அத்தநாள் திதிவாரயோககரணம்-நிலையுற்ற
வன்புறுபுணர்ச்சிநிலைகள்.

தலைவன்றலைவியைவிடுத்தல்

வாங்கியமேருவிற்கோடீச்சுரசித்தர்மால்வரைநின்
றீங்கியலுற்றெனைக்காத்தனையேலனமென்னநடந்
தாங்கியன்மஞ்ஞையெனப்போயுனைக்காத்தருகிருக்கும்
பாங்கியர்கூட்டமெனுங்கூட்டிடையுறைபைங்கிளியே. (௱சரு)

பாங்கிதலைவியைச்சார்ந்துகையுறைகாட்டல்,

திகைகொண்டவான்புகழ்க்கோடீச்சுரசித்தர்திண்சிலம்பிற்
றொகைகொண்டகஞ்சமெற்காணுமுன்கண்ணீர்சொரிகின்றவும்
பகைகொண்டிலவெனமெய்வாடிநின்றவும்பற்றிலன்முன்
னகைகொண்டுநின்றவிதுகொண்டுவந்தனனன்னுதலே, (௱சசு)

பாங்கிதலைவியைப்பாங்கிற்கூட்டல்.

தீந்தேமலர்ச்சடைக்கோடீச்சுரேசர்சிலம்பினின்று
போந்தேமணம்பெறுமாவியுற்றுடிப்போதுகொண்டா

யேந்தேரிளமுலையாய்விளையாடற்கினிப்பொழிற்க
ணாந்தேடுமோதர்நமைத்தேடுமுன்னங்குகண்ணூர்வபமே, (௱சஎ)

பாங்கி தலைவற்கோம்படைசாற்றல்.

சகத்திருந்தேரினர்கோடீச்சுர வெற்பசாறுமெங்கள்
சுகத்தின்பொருட்டுற்றமுன்றுதெண் வேணைச்சுகந்துயர
மிகத்தியங்காதெதிர்கண்டோர்க்கிவெண்ணைச்செவவேலை முன்
னகத்திடப்படஞ்சரம்வைத்தினிக்காத்திட ருள்புரிந்தே. (௱சஅ)

விருந்துவிலக்கல்

ஆறுறின்மேலுறைகோடீச்சுரநம்பரப்பொன்வெற்பின்
மாறுறுகள்பலவாறுமவ்வாறெல்லைவந்தொளிரும்
காறுறிருந்தின்னல்செந்தேனொடுநற்கனிதருவேன்
றேறுறுணர்மன்னவாகொண்டுறங்குபின்சென்றருளே (௱சகூ)

விருந்திறைவிரும்பல்

சமரவெஞ்சூலத்தர்கோடீச்சுரவெற்பிற்சாற்றுமன்போ
டமரருணவிற்றினைமாவுந்தேனுமளிப்பிரெனிற்
கமலையன்னீரென்றவப்பலன்மேலிங்கன்கணடவோ
குமரக்கடவுள்குடிகொண்டனனிக்குறிஞ்சியிலே. (௱ருய)

கிழத்திமாலையம்பொழுதுகண்டிரங்கல்,

பொருந்தியமால்விடைக்கோடீச்சுரேசர்புகழ்க்கிரிமே
லருந்திறல்வேள்விடுமுல்லைமென்பூசரமாற்றலளாய்
வருந்திடுவேற்குருநீடிச்செல்வுந்திமாலையினை
திருந்திழையீண்டுவரவிட்டதார்பின்னுஞ்செப்புகவே. (௱ருக)

பாங்கிபுலம்பல்.

சேவுற்றுகைப்பவர்கோடீச்சுரேசர்சிலம்பின்மதன்
மாவுற்றதன்னவன்றேறுற்றதாங்கவன்வணகவிகை
மேவுற்றதன்னேனென்றனைவாவிரைந்தெனவெங்குயிலோ
கூவுற்றதீண்டினியென்படுமோதனிக்கோற்றொடியே. (௱ருஉ)

தலைவனீடத்தலைவிவருந்தல்.

கருமுத்தமாலையன்விண்ணோர்பணிந்துகலந்துவலம்
வருமுத்தமாலையர்கோடீச்சுரேசர்வரையிலன்று

குறுமுக்தாமாலைபலகொடுக்கார்வந்துகூடியெனக்
கொருமுத்தமாலையிப்போதுகந்தாலுயிருய்குவனே. (௱௫௩)

உத்தமவாலையர்-கொடுத்தார்-கொடுத்தவர் மாலையாகியவிப்போது.

வங்கொருமுத்தங்கொடுத்தால்.

தலைவியைப்பாங்கிசுற்றல்.

வணங்கருவெய்யோன்முதலவர்போய்ப்போய்வருதல்கண்டு
மணங்கவரீண்டுத் தணந்தனரென்னவருந்தலென்னீ
பணந்தருபூணினர்கோடீச்சுரத்தர்பைம்பொன்வெற்பிற்
றணந்தவர்மீண்டுமணைந்திடுவாரென்றளிரியலே (௱௫௪)

தலைவிமுன்னிலைப்புறமொழிமொழிதல்.

அரியாரணன்முன்னடிமுடிகாண்டற்கரியவர்கா
விரியார்தடங்கரைக்கோடீச்சுரத்தர்வெற்பிடத்திற்
றெரியாருமுற்றத்தெரிந்தாருமோ இற்றெளிவரல்லாப்
பெரியார்க்குணர்த்தினுரைத்தவையாவும்பிழைபடுமே. (௱௫௫)

தலைவிபாங்கியொடுபகர்தல்.

நாணவொண்ணாவிற்கோடீச்சுரேசர்நளிர்வரைமேற்
காணவொண்ணாநல்லோர்தமைக்காணிற்கலந்திடன்பு
பூணவொண்ணாதன்புபூண்டாற்பிரிவுபொருந்தவொண்ணா
தேணவொண்ணாதப்பிரிவுறினாவிபின்னேந்திழையே. (௱௫௬)

தலைவியைப்பாங்கியச்சுறுத்தல்.

சேவையுகைப்பவர்கோடீச்சுரேசர்சிலம்பிலொரு
கோவையகம்வைத்துலாப்புறங்காட்டிக்கூறிகணுட்
பாவைநினைக்குரலெல்லாஞ்சுகங்கொடுபாழினவா
லேவைவிகர்விழியாயினிகாப்புனக்கில்லிடமே. (௱௫௭)

நீங்கற்கருமைதலைவிநினைந்திரங்கல்.

கல்லார்புகழ்சிவன்கோடீச்சுரவெற்பினூன்முகனவ்
வில்லாருடனமக்காவியொன்றாகமெய்வேறுசெய்தச்
சொல்லாருமெய்களுமாண்பெண்ணெனச்செய்துதோற்றவருட்
கல்லாகமுண்மலராகச்செய்ததென்கற்பனையே. (௱௫௮)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

தாதாடுகொன்றையர்கோடீச்சுரேசர்சயிலமலர்க்
கோதாயுன்னன்பர்தந்தேரோதைகேளினிக்கூறுவதென்

போதாமதன்கணையாருயிராங்கென்றஸ்புத்தரு தின்
மீதாமதிக்கதிருன்றனக்கோ இவ்வியனிலத்தே. (௱௫௯)

பாங்கிதலைவற்குச்சிறைப்புறமாகச்செறிப்பறிவுறுத்தல்.

தனத்தத்தைமானுக்குகவுகோடீச்சுரத்தானுவெற்பி
னினத்தத்தைகாளககணியார்மலர்வாயிருலெமர்ககித்
தினத்தத்தையார்தினைகொய்கெனவோதினர்சேர்ந்தவரிப்
புனத்தத்தையாற்றுவர்யாம்போதுநீர்சுகம்பூண்டிருமே. (௱௬௰)

முன்னிலைப்புறமொழிமொழிந்தறிவுறுத்தல்.

சிறந்தார்புகழ்மன்கோடீச்சுரவெற்பர்சென்றங்கெம்மை
மறந்தாலுநீவிர்மறவாதிருமின்மறக்கின்வரி
நிறந்தாங்கியவண்டுகாளளியாரெனுநீடுபெயர்
இறந்தானுறுதிங்குநாங்கள்செல்வோந்தினைசென்மனைக்கே. (௱௬௧)

பாங்கிமுன்னின்றிற்செறிப்புணர்த்தல்.

நிறந்தருவேங்கைதென்கோடீச்சுரநித்தர்வேரியின்வாய்
திறந்ததுநோக்கியெமரீங்கடைந்துதினைகொய்தெம்மை
மறந்தருமிங்ஙன்வைக்கொண்டுதெனக்கொண்டுமன்னவெங்க
ளறந்தருமில்லில்வைக்கின்றனர்போதுமவர்வழியே. (௱௬௨)

பாங்கிமுன்னின்றுணர்த்தியோம்[illegible]சாற்றல்.

MAHAMAHOPADHYAYA DR. U. V. S. IYER LIBRARY, BESANT NAGAR, MADRAS-90

எங்கேதமன்பரிருக்கினுமாங்குற்றிசைக்[illegible]
வெங்கேதந்தீர்த்தருள்கோடீச்சுரேச[illegible]சிலம்ப
விங்கேதங்காமற்றினைக்கதிரோடில்லமெய்து[illegible]
மங்கேதமகிகர்சூழ்ந்தலைக்காக்கவணைந்தருளே. (௱௬௩)

தலைவன்றஞ்சம்பெறுதுநெஞ்சொடுகிளத்தல்.

நீளாசுகச்செயுங்கோடீச்சுரநம்பர்நேரினல்லார்
கேளாசுகவெள்ளத்துற்றழைத்தேகக்கிளர்மனைப்போய்
வாளாசுகமுறவைகுவராண்டிங்கு ந்தமர்செய்
யேளாசுகத்தைநெஞ்சேயினியாவர் விலக்குவரே. (௱௬௪)

இறைவனைப்பாங்கிகுறிவரல்விலக்கல்.

[illegible]ான்போலுமெய்யினர்கோடீச்சுரேசர்புகழ்வரைக்கண்
முன்போலடிக்கடிவாரல்வெற்பாவிம்முதிர்புனத்தி
லன்போடிளங்கன்றிடைப்புனிற்றுவெனவன்னையொளிர்
மின்போனுடங்கிடைதன்பால்வருமெங்கவேலையுமே. (௱௬௫)

இறைவியைப்பாங்கிகுறிவரல்விலக்கல்.

உலகந்தருசிவன்கோடீச்சுரமன்னவொண்ணுதலுந்
திலகமுங்கூந்தலும்போனமெய்ச்செவ்வியுஞ்சேரக்கண்டு
நலகங்கறுத்துநகைத்துயிர்த்தேகினணம்மனையின்
றிலகந்தருமிவ்விடமவ்விடமாயினிநமக்கே. (௱௬௬)

தலைவியாடிடநோக்கியழிதல்.

மறக்கதிர்ச்சூலத்தர்கோடீச்சுரேசர்வரைநெருநற்
றிறக்கிளிகள்புனம்வாராதகற்றினஞ்சேரவின்று
நிறக்கிளர்பூஞ்சுனைதன்னோடிச்சோலைநிழலும்விட்டுப்
பறக்கின்றனஞ்சிறைகொண்டங்கதிங்குபுவித்திட்டதே. (௱௬௭)

பாங்கியாடிடம்விடுத்துக்கொண்டகறல்.

இறைநோக்குமார்பரன்கோடீச்சுரவெற்பில்யாமிறைத்த
பிறைநோக்கிடாதெழிற்பைங்கிளிகாளெம்பிரிவுவந்தும்
முறைநோக்கிறைக்கிசைத்தாரோதியூர்வழியூரவர்கண்
மறைநோக்கியேகுமெனவுண்மையோதிவரவிடுமே. (௱௬௮)

இறைவன்குறிவயிற்சென்றிரங்கல்.

குழையார்செவியினர்கோடீச்சுரேசர்குவட்டிடையவ்
வுழையார்விழியனைக்காணலமூர்வழியோர்க்கிலகந்
தழைபார்வங்கொண்டங்ககன்றிருந்தனந்தன்னின்மன்னே
றிழையர்பிருந்தனமென்றுரைவருடனேகுவமே. (௱௬௯)

வறுங்களநாடிமறுகல்.

மந்தாகினிச்சடைக்கோடீச்சுரேசர்வரைத்திருமான்
வந்தாலத்தோடம்மனையாடுமோமைவளையொலிக்கப்
பந்தாடுமோசுகம்புள்ளினங்காளிக்தப்பைம்பொழிற்கட்
டங்காளுமோவொருகாலமுன்போலத்தமியனையே. (௱௭௰)

வாழுமூர்நோக்கிமதிமயங்கல்.

பெருவிண்ணவர்புகழ்கோடீச்சுரேசர்பிறங்கலினந்
திருவின்புறுமூரஃதுசிறாரதிற்செறிவோ
ரிருவின்மறவர்களன்போலநாமுமவ்விந்திரன்பா
லொருவிஞ்சைபெற்றிதற்போய்வரலாமங்கவூர்தனக்கே. (௱௭௧)

இறையோனிருட்குறிவேண்டல்.

வணந்தங்குவார்சடைக்கோடீச்சுரேசர்மணிவரைவண்
டினந்தங்குகோதைநின்சீறாரிடத்தின்றிரவுதனிற்

தன்றங்குகாவின்முன்னாளெனக்கிருகைக்கிறையத்
கனந்தந்தவர்தம்மிடைவருவேனின்னுந்தான்பெறவே. (௱௭௨)

பாங்கிநெறியினதருமைகூறல்.

நெடுங்கயிலாயத்தர்கோடீச்சுரநித்தர்நேரியின்பாற்
கொடுங்குன்றுநீடுவளரானைக்காவுங்குறிப்பின்மனை
நடுங்குமிகுபுனற்கொள்ளிடவாறுமிந்நாளிரவி
படுங்கதிர்வேலகடந்திண்டணைதலருமையதே. (௱௭௩)

தலைவனெறியினதெளிமைகூறல்

ஒளியார்செம்மேனியர்கோடீச்சுரேசருயர்வரைமேற்
றெளியாரமுகந்தகாரிகைமுகத்திங்களுரு
வெளியாயுறும்போதிருளெனக்கேதன்றிமேலுமந்தக்
களியார்மயின்முற்பணிதொன்றலைதுகனங்குழையே. (௱௭௪)

பாங்கியவனாட்டணியியல்வினாதல்.

நீடும்புகழரன்கோடீச்சுரவெற்பநேருனது
நாடுமந்நாட்டுநறுநுதற்பாவையர்நாளுமினி
தாடுமமுதத்தின்சீருந்தளைசெய்தணிதெடையும்
பாடுமப்பாவும்பயிலுமினமும்பணித்தருளே. (௱௭௫)

தலைவனவனாட்டணியியல்வினாதல்.

என்னாட்டணிநோக்கிடநீவருங்காலியம்புவன்முன்
னின்னாட்டியலிசைநாடகமாடுதிநீயெனக்குப்
பொன்னாட்டினர்பணிகோடீச்சுரநம்பர்பொற்கிரிமேல்
வன்னாட்டியதன்னகொங்கைமின்னேரிடைவாணுதலே (௱௭௬)

தன்னாட்டணியியல்பாங்கிசாற்றல்.

நாதாரமார்பங்கர்கோடீச்சுரேசர்வரையிடமே
பாதாரமாகவிருந்தாடுவார்மயிலாடுதுறை
நாதாரம்பாமெனுங்கண்ணார்மகளிர்தென்காஞ்சியொடு
கேதாரம்பாடுவரெங்கள்பொன்னாட்டினுங்கேளரசே (௱௭௭)

பாங்கியிறைவிக்கிறையோன்குறையறிவுறுத்தல்

வெவ்வாண்மழுப்படைக்கோடீச்சுரவள்ளல்வெற்பின்வரி
மவ்வாணம்படுங்குழலாய்மதியின்கலையமுதை

யவ்வாதரங்கொள்சகோரமுண்காலத்தரசருண்பாற்
செவ்வாய்க்கிழமையமுதுக்குத்தாம்வரல்செப்பினரே. (௱எ௮)

நேராதிறைவிநெஞ்சொடுகிளத்தல்.

தோட்டுவிற்காதரன்கோடீச்சரவெற்பிற்றோன்றியசெங்
கோட்டுயர்வேழத்தெதிர்நமைக்காத்தவர்கூடிவரி
பாட்டுளர்கானத்திராவரச்செய்தனள்பம்பரத்தை
யாட்டுவிக்குந்தனத்தாணெஞ்சமேயின்னதாய்ந்திலளே. (௱எ௯)

தலைவிபாங்கியோடுநேர்ந்துரைத்தல்.

முன்னாணமக்குயிராவியிலீந்தமுதல்வர்வந்திங்
கென்னாருயிர்காத்திடுதியென்றாலதற்கென்செயலாம்
வின்னாணபணிகொண்டகோடீச்சரவள்ளல்வெற்பிடத்தி
லுன்னாவகத்திற்கிசைந்ததைநீயேயுரையணங்கே. (௱௮௰)

நேர்ந்தமைபாங்கிநெடுந்தகைக்குரைத்தல.

திகையுலவும்புகழ்க்கோடீச்சரநம்பர்திண்சிலம்பிற்
றகையுறுமாதுளம்மன்காய்தனைப்பகர்தந்திரந்தா
ணகையுறுவேலமெலக்கனியாக்கினான்பணிந்து
தொகையிதுவாமேல்வகையும்விரியுந்தொடர்ந்துணரே. (௱௮௧)

குறியிடைநிறீஇத்தாய்துயிலறிதல்

இலங்கையிற்காவையனுமானலைத்ததெனத்திருக்கை
யிலங்கையிற்சூலத்தர்கோடீச்சுரேசரிமையவெற்பி
னிலங்கையினீள்விழிமானேநஞ்சோலையையீடழித்தக
திலங்கையிற்போகவுஞ்செய்திட்டதானையொன்றின்றுவந்தே. (௱௮௨)

இறைவிக்கிறைவன்வரவறிவுறுத்தல்.

முடிவனைகொன்றையர்கோடீச்சுரேசர்முருகுவெற்பி
னடிவளரேனற்புனத்தேபகல்வந்தவம்மதமா
கொடிவளர்காவினிடைவந்துதன்னொடுகூடவந்த
பிடிவரனோக்கிநிற்கின்றதுவானுதற்பெண்ணரசே. (௱௮௩)

குறியிடத்திறைவியைக்கொண்டுசேறல்.

ஆடகவில்லினர்கோடீசசுரேசருண்மருவிச்
கூடக்காந்தளஞ்செங்கையின்னேமுகில்சூழ்பொழில்கு

ழேடகமார் திருப்பூவணம்பார்த்திறைகூடலுங்கண்
டடகமேவுதிவாராய்சிவஙிசியின்னதிலே. (௱௮௪)

குறியிடத்துய்த்துநீங்கல்

பணங்கொண்டபூணினர்கோடீச்சுரமன்னயானையிருள்
வணங்கொண்டகோதைக்கணிசெயநான்மென்மலர்பறித்துக்
கணங்கொண்டணைவலிக்காவகத்தேநில்கருதிடுநன்
மணங்கொண்டுலாவுறுதென்றலுன்மேனிமருவுறவே. (௱௮௫)

தலைவனெதிர்ப்படுதல்.

ஊர்திறலேற்றனர்கோடீச்சரவெற்பிலோதுவரி
நேர்திறம்பாடுமைக்கோதைநல்லாயிங்ஙிசியில்வெய்யோன்
சீர்திறம்பாத்தன்கரத்தாலடைத்திட்டதிண்மனையக்
கார்திறந்தார்வந்தெவ்வாறுவந்தாய்தனியாருயிரோ. (௱௮௬)

தலைவியாற்றினதருமைநினைந்திரங்கல்.

வில்லரிமேருவெனமேல்வளைத்தவர்வில்வநறு
வல்லரிசூடியகோடீச்சுரேசர்வரைக்குறவர்
கொல்லரிகுத்தெனச்சூழ்ந்திடுங்கானிடைக்கொற்றவநீ
யல்லரிவேழம்பிழைத்தீண்டணைந்ததருமையதே. (௱௮௭)

தலைவன்றேற்றல்.

சினத்திரிசூலத்தர்கோடீச்சுரேசர்திருப்பதமென்
மனத்துறலாலெதிர்தோன்றுங்கடங்கன்மடங்கியது
வனத்திற்கரியுங்கரிந்ததுநீங்கின்றிவந்தனன்யா
னினத்திகழ்பொற்றொடிக்கையா யொளிமுன்னிருளில்லையே. (௱௮௮)

புணர்தல்.

தெள்ளக்கலைச்சடைக்கோடீச்சுரேசர்சிலம்பிடையென்
னுள்ளக்கமலத்துறைதிருவேயிவ்வுலகஞ்சுற்றும்
வெள்ளக்கடற்குக்கரையுண்டளவுண்டுமேவுமிந்தக்
கள்ளக்களிப்பெருங்காமக்கடற்கரைகண்டிலனே. (௱௮௯)

புகழ்தல்.

வெண்பொடிப்பூசத்தாதிரையார்மகமேலழித்தோர்
பெண்புணரத்தத்தர்கோடீச்சுரத்திந்தப்பெண்மணிகர்யா

றொன்பயினுகமடந்தையர்தாழ்ந்தவரோத்திமையோர்
கண்புறுமாதர்களந்தரத்தோர்மண்ணினணிலரோ, (௱௬௰)

இறைவியிறைவனைக்குறிவரல்விலக்கல்.

உள்ளன்புணர்ந்தருள்கோடீச்சுரேசர்தபோங்கலன்ப
கள்ளம்பெரிதுகராம்பெரிதாற்றிற்கவலைநெறி
வள்ளம்புதூர்ப்பர்வனசரர்நீதலிவாரல்வரு
வெள்ளங்கிணற்றுப்புனல்கொண்டுபோதலின்மேதினிக்கே. (௱௬௧)

தலைவன்றலைவியையில்வயின்விடுத்தல்.

எனையாளவந்ததிருவேதனிநில்லலேலதில்வண்டர்
டனையார்கள்றண்டுகளித்துத்திரியுமிப்பைம்பொழிற்கண்
வனையாறுறசடைக்கோடீச்சுரவள்ளல்வண்சிலம்பி
லனையாங்குநின்றனைத்தேடுமுன்னேகிடலர்மனைக்கே. (௱௬௨)

பாங்கிதலைவியையெய்திக்கையுறைகாட்டல்.

சலந்தரற்காய்ந்தவர்கோடீச்சுரேசர்தடஞ்சிலம்பின்
லலந்தருசேல்விழிமானேதளவமலர்கொணர்ந்தே
னலந்தருமீதுனைகையெழினோக்கிமுன்றுணைமுற்று
மலர்ந்திடல்போலுள்ளுடைந்தாங்குநின்றதுவாய்திறந்தே (௱௬௩)

பாங்கிதலைமகளையிற்கொண்டேகல்.

தாய்துயினீங்கினென்றுயெங்கெனுமதுதானுமன்றி
வாய்துணைவாரியடைப்பினுங்கூடிடவாயிலைநம்
மேய்துதிகொண்டருள்கோடீச்சுரேசரிமையவெற்பி
லாய்துடிநேரிடையாயொல்லைவாபின்னகந்தனக்கே. (௱௬௪)

பாங்கியிறைவனைவரவுவிலக்கல்.

மாயாவினோதர்தென்கோடீச்சுரேசர்வரையிறைவ
சாயாவனமுங்கழிப்பாலையுந்தள்ளிச்சாரினுமித்
தியார்குறிஞ்சியிற்சாரவொண்ணாதுதெரிக்குமிவை
யாயாதிரவில்வரினீயெனக்காமரும்பழியே. (௱௬௫)

தலைமகன்மயங்கல்.

காவென்றுரைக்குமுன்வாவென்றழைத்துக்கதியருளுந்
தேவென்றுரைசிவன்கோடீச்சுரவள்ளல்செஞ்சிலம்பிற்
போவென்பதேபுகலின்றுளொருபுயல்போற்றதன்மேற்
றுவெண்மதிக்கதிரன்றுள்சுகமாஞ்சகோரமதே. (௱௬௬)

தோழிதலைமகடுயர்கிளந்துவிடுத்தல்.

அரவிடையீசர்தென்கோடீச்சுரவெற்பவண்ணுமடிவ்
விரவிடைவிண்ணொலிகேளாமகிழ்மயிலென்னவெமமா
னிரலருங்கான்கடந்துன்னூரணைந்தபின்னீகுறிக்கு
மிரலைதன்வாயொலிகேட்டபின்றான்களிப்பெய்துவதே (௱௯௭)

திருமகட்புணர்ந்தவன்சேறல்.

பொன்னுறழ்மெய்யரன்கோடீச்சுரமன்னபூங்கொடித
னுன்னுமிடையல்குலாநநேமைமையோதுகென
மின்னுமரவுமதியுமங்கங்குவெளியுறவென்
முன்னுறவெய்திநெறிகாட்டநான்செல்வன்மொய்குழலே. (௱௯௮)

இறைவிக்கிகுளையிறைவரவுணர்த்தல்.

இலகம்புனைசடைக்கோடீச்சுரவள்ளலேமவெற்பிற்
கலகம்புரிவடிவேல்விழியாய்நந்தங்காவினிடை
யுலகம்புரக்குமுன்மேகம்வந்தெய்தியதோதலுறு
நலகம்பலைசெவிக்கேட்கலுற்றேனிங்குநண்ணலுற்றே. (௱௯௯)

தான்குறிமருண்டமைதலைவியவட்குரைத்தல்.

வெள்ளங்கொள்வேணியர்கோடீச்சுரவன்பர்மேவுறச்செய்
கள்ளங்கொளோதையெனவேற்றொலியினைக்காவடைந்தேன்
கிள்ளையினங்கள்சுகமாயிருந்தனகேகயமென்
னுள்ளமருளமுற்றோகையதாயங்குறைவுற்றதே. (௨௱)

பாங்கிதலைவன்றீங்கெடுத்தியம்பல்.

கார்மேவியகண்டர்கோடீச்சுரவன்பாகாவினிடை
வார்மேவியகொங்கைநீபோயடிக்கடிமாழ்கிவர
நீர்மேலெழுதிவைத்தேகினராகுறினைகுறிவை
யார்மேலறியவல்லாரவர்மாயமுமார்வமுமே. (௨௱௧)

தலைவன்புலந்துபோதல்

மின்செயுஞ்சூலத்தர்கோடீச்சுரநம்பர்வெற்பினினி
யென்செய்வமென்னவிரங்குநெஞ்சேயிவ்விடையிரவிற்
றென்செயம்போருகச்செந்தேனமக்குத்தெரிவுறமோர்
நின்செய்கையானுமலைத்தேனலைத்தாய்நெடிதெனையே. (௨௱௨)

புலர்ந்தபின்றலைவிவருங்களங்கண்டிரங்கல்,

பொன்னாகமால்புகழ்கோடீச்சுரேசர்புகார்த்துறைவாய்ப்
புன்னாகமேவியபுள்ளினங்காளன்பர்புக்கிரவின்
முன்னாகவிங்குற்றனரோவெனக்குமொழிமினின்றிப்
பின்னாகமேவிலவர்க்குரைப்பீரெனபெருந்துயரே. (உ௱௩)

தலைவிபாங்கிக்குரைத்தல்.

நெய்யார்மழுவினர்கோடீச்சுரவெற்பர்நென்னல்வரை
பொய்யாரெனப்பொருண்மாறுகொண்டேனவர்போற்றிடுமின்
றய்யானமெய்துவனென்றுசொன்மாறுரைத்துற்றவப்பேர்
மெய்யாயுடன்படச்செய்துகொண்டார்மதிமெல்லியலே, (உ௱௪)

தலைமகளவலம்பாங்கிதணித்தல்.

தகரக்குழல்பங்கர்கோடீச்சுரநம்பர்சய்யநெடுஞ்
சிகரத்துதித்தநதியின்பின்னேகியசேமலரை
வகரமுன்மேவுங்குளத்திடைநோக்கினன்வண்பொழிற்கட்
பகரணியார்முலைமாதேதவிர்நின்பருவரலே. (உ௱௫)

சிகரத்துதித்துவருகின்றநதி-காவிரி-இதிற்பின்னேகியதுகாவி
வகரமுன் மேவுகுளம், வகுளம்-அதுமகிழ மரம்.

இறைவன்மேற்பாங்கிகுறிபிழைப்பேற்றல்.

தாரார்கடுக்கையர்கோடீச்சுரேசர்தடஞ்சிலம்பிற்
கூரார்மணிவேற்கரத்தீர்நெருநற்குறியிடத்து
வாராதிருந்தீருமதூர்க்குராங்கள்வரக்குறித்தே
மூரார்பெயருநும்பேரும்விள்ளாமையினுற்றிலமே. (உ௱௬)

இறைவிமேலிறைவன்குறிபிழைப்பேற்றல்.

என்னைமுன்னாண்டருள்கோடீச்சுரவள்ளலேமவெற்பின்
மின்னையன்னாள்வடிவென்றுங்குயிலிசைமேவுமென்சொற்
றன்னையன்னாண்மொழியென்றுமற்றங்கஞ்சுச்சார்ந்திட்டேங்கள்
பொன்னையிரும்பொழிற்காணகிலனூர்சென்றுபோந்தனனே. (உ௱௭)

தலைவிகுறிமருண்டமைபாங்கிதலைவற்குரைத்தல்.

நீலுண்டகண்டத்தர்கோடீச்சுரேசர்நெடுஞ்சிலம்பி
னேலும்புளினஞ்சிலம்பினுந்தாருவிழைந்திடினு

மேலுங்குறிவேற்றுமையறியாள்சென்றுமீண்டுபின்போய்க்
காலுஞ்சிவந்திட்டதல்வழிக்காவலகன்னிகைக்கே (௨௱௮)

அவன்மொழிக்கொடுமைபாங்கியவட்குரைத்தல்.

கங்கைச்சடையினர்கோடீச்சுரேசர்கயிலையிலா
சங்கைக்கிடமிலெண்சங்கேதநேருந்தனைகயற்றிந்த
மங்கைப்பருவமுதலாயதுங்கணமடவரர்க்கென்
றங்கைத்தலத்தெளிர்வேலர்சொன்னார்வந்தணியிழையே. (௨௱௯)

என்பிழைப்பன்றென்றிறைவிநோதல்

மறக்குஞ்சரமுரிகோடீச்சுரேசர்வரையளிகள்
பறக்குமிசையுஞ்சருகோடலருதிர்பாட்டியலு
முறக்குமிடந்திருந்தொண்பொழில்வாய்க்கேட்டுணைக்குமவர்
சிறக்குங்குறியென்றலேந்தேனிருளிடைத்தேமொழியே. (௨௱௰)

தாய்துஞ்சாமை.

வணங்கார்புரம்வென்றகோடீச்சுரேசனைவாழ்த்திப்பினி
திணங்காகுமிந்தப்பிறப்பிடையேபண்ணிசைவரியின்
கணங்காமுறகருங்கூந்தன்மின்னேயன்னைகண்ணிமையா
துணங்காயினளிரவெல்லாந்தனியேனணங்குறவே (௨௱௰௧)

நாய்துஞ்சாமை

வீயுறங்கும்பொழிற்கோடீச்சுரநம்விமலர்வெற்பிற்
பேயுறங்காதங்கதனுடன்றாய்துயில்பெற்றிடினும்
நாயுறங்காதன்னதன்கணுறங்கினுநாடுமதன்
வாயுறங்காதிவற்றண்ணலெவ்வாறுவருமிரவே. (௨௱௰௨)

ஊர்துஞ்சாமை.

மருக்கொண்டகொன்றையர்கோடீச்சுரேசர்வரையிடத்திற்
குருக்கொண்டவொண்டொடிப்பைங்கிளியேயென்கொடுமையிருட்
கருக்கொண்டுநீடுவிழாவொடுகூத்துக்கதைகளென
வுருக்கொண்டுவந்திந்தவூருறங்காமலுஞற்றியதே. (௨௱௰௩)

காவலர்கடுகுதல்.

நாவலர்போற்றிடுங்கோடீச்சுரேசர்நளிர்வரைக்க
ணேவலரான்மதன்றாக்கமெய்வாடுநம்மேந்தலுக்கு
மேவலராகித்துடியடித்தார்த்துவிடிவளவுங்
காவலர்சூழலின்வாரானிச்சூழலிற்காலனுமே. (௨௱௰௪)

நிலவுவெளிப்படவருந்தல்.

சுரும்பார்மலர்ச்சடைக்கோடீச்சுரேசர்சுடர்க்கிரிமே
லரும்பாமுலைக்கொடியன்பரென்பாலவந்தகலளவும
வரும்பாழ்மதியைப்புதைத்தாங்குவைத்திடவல்லவரார்
கரும்பாந்தளொன்றுளதந்தவெட்டுண்டதைக்கண்டிலனே. (௨௱௰௫)

கூழைகுழறுதல்.

மூரண்டருவேலார்க்கியல்கவ்வரியின்மொழியரு
மிரண்டுடன்முன்னதற்கஞ்சாறுடொன்பதிணைதல்வெண்ணெய்
திரண்டுறுவேலையிற்றூழிச்சிறைதவொக்குஞ்செய்ங்கையா
லரண்டுகளாக்கிறைகோடீச்சுரமன்னவாயிழையே. (௨௱௰௬)
கவ்வரியினிரண்டு-கா -முன்னது-க-காகத்துக்கஞ்சுகின்ற,கூக-கூழை.

கோழிதூரற்காட்டுதல்.

வடியேர்கொள்வேலொடுசேய்போலிறைவர்வருதல்கண்டு
கொடியேனிவ்வூரிடையுள்ளேனென்கின்றதுகோழியிந்தப்
படியேயெனக்கிகலாயிங்கிருவெனப்பன்னிச்செல்வார்
துடியேரிடையவர்கோடீச்சுரநம்பர்தூய்வரைக்கே, (௨௱௰௭)

பாங்கிதலைவியைப்பருவரல்வினுதல்,

மகஞ்செயுமோமப்புகைபோய்விசும்பின்மழைபெய்வித்துச்
சகஞ்சலிபாமற்செய்கோடீச்சுரவள்ளல்சாரலிலுன்
னகஞ்சலிப்புற்றதென்னோரென்னவோதினரன்னைநின்
முகஞ்சிறிதோதின்றுநீசிறிதோதுமுகிழ்முலையே. (௨௱௰௮)

தலைவியருமறைசெவிலியறிந்தமைகூறல்.

கயலையுமவேலையுநேர்விழியீரன்னைகாவுடனே
வயலையுஞ்சூழுநங்கோடீச்சுரநம்பர்மால்வரையென்
செயலையுநீர்கொண்டசேலையுமாகத்திளைத்தெழுந்த
பயலையும்பார்த்தெவனென்றுண்மிகவும்பயந்தனளே. (௨௱௰௯)
நீர்கொண்டசேலை-நீர்துளிக்கின்றசேல்போன்றகண்ணை,பயலை-பசலை

தலைவிதலைவன்வருந்தொழிற்கருமைசாற்றல்.

கொங்கலர்க்கோதைநங்கோடீச்சுரேசர்குவட்டினிடைத்
திங்களோரம்புலிகோழியோர்வாரணஞ்சேண்பொழிலிற்
றங்குங்குடிஞையோர்கோட்டானிசைந்திடுஞ்சாரிவறை
யெங்குக்கடந்தன்பரெவ்வாறணைகுவரிவ்விடத்தே. (௨௱௨௰)

தலைவி தலைமகனூர்க்குச்செலவொருப்படுதல்.

மேனூர்மதிச்சடைக்கோடீச்சுரவள்ளல்வெற்பரென்றன்
மானூர்மனத்தினைக்கொண்டகன்றாரைநவாங்கிவரக்
கானூர்தருகின்றதுசெல்லுவோமெனிற்கண்ணுதல்வாழ்
நானூரென்னூரென்றணங்கேயவர்முன்னவின்றனரே. (௨௨௧)

பாங்கியிறைவனைப்பழித்தல்.

சேலலர்செங்கையிற்சென்னியுந்தாண்மேற்றெறிக்குமெழி
லோலலர்க்கண்ணுங்கொள்கோடீச்சுரவள்ளலோங்கலினும்
வாலலர்க்கோதைவளவரென்றெண்ணியபன்னரிங்குச்
சோலரானதிற்கைதவராவர்தெளிவுறினே. (௨௨௨)

இறைவனைத்தலைவியியற்படமொழிதல்.

ஞாயாயுலகிற்குத் யுமாடருள்சங்கரர்செவ்
வாயார்மறையினர்கோடீச்சுரமன்னமாதிறைவர்
தீயாரென்றேறிடலோராதவரல்லர்தெண்மதியர
ராயாதிருப்பத்தெளியேயன்றுபவென்னருவினையே. (௨௨௩)

தலைவிகனவுநவிலுரைத்தல்.

பெண்ணுருபாகத்தர்கோடீச்சுரவெற்பர்பேசரவி
னண்ணியுரம்பெறுநாளங்கைக்கொண்டுகைமுகமுற்
றுண்ணயப்பெய்துறவாடிடவாவெனவேதிகர்நான்
கண்ணிணைவிழித்தங்கெழுந்தேனவர்தமைக்கண்டிலனே. (௨௨௪)

தலைவிகவினழிவுரைத்தல்.

நங்காய்நங்காவலரூரினிலாத்திறநன்றறிந்து
கொங்காரும்வேடன்படைதனியேன்பொற்குழைகளெலா
மிங்காவலினுற்றச்சூறையிட்டோடிற்றிமையமங்கை
பங்காளரங்கணர்கோடீச்சுரேசர்பணிவளைக்கே. (௨௨௫)

கொங்கு-தாது. வேடன்படை-மதன்கணை.

பொற்குழை-அழகின்குழை.

தன்றுயர்தலைவற்குணர்த்தல்வேண்டல்.

அங்காவியங்கண்ணிகோடீச்சுரவள்ளலன்பர்முன்போ
யெங்காரிகைபொன்னிறமேற்றுமா [illegible]

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY
BESANT NAGAR, MADRAS-90

யமகாதரத்திலுளாத்தோரெனக்கென்றனருயிரிங்
கிங்காய்தனக்கொருபெண்ணிந்துயர்புகழேற்பவரே. (உஉசு)

நின்குறைநீயேசென்றுரையென்றல்.

விரைபெயிதழியுமத்தமுஞ்சூழுறவேணியினார்
பரையேயிடத்தினர்கோடீச்சரேசர்பணிவரைமேல்
வரையெனுங்கொங்கைமின்னேசொன்மூலமறந்தவர்க்கென்
னுரையேறுமோநின்குறையாவுநீயேயுரையெதிர்ந்தே. (உஉஎ)

அலர்பார்த்துற்றவச்சக்கிளவி.

சிவன்றாளனுகிப்பரவைதன்பாலன்பிற்சென்றுவந்த
பவன்றாயசோதிதென்கோடீச்சுரவெற்பிற்பைங்கழைவில்
லவன்றாற்றலரினுக்கச்சமின்றன்னுணனிமின்னு
ரியண்டேற்றலரினுக்கஞ்சினனுறிலனைமையனே. (உஉஅ)

ஆறுபார்த்துற்றவச்சக்கிளவி.

தன்னேரிலாயான்கோடீச்சுரவெற்பர்சாருங்காற்
கன்னேர்மனங்கொண்டிருப்பதுநோக்கியுங்காதலுற்ற
வென்னேழைநெஞ்சிண்டொருக்கால்வரிற்கானிடையவர்த
முன்னேயெழுந்தீக்காக்காயுருகிடுமொய்குழலே. (உஉகூ)

காமமிக்ககழிபடர்க்கிளவி.

நறியமென்கொன்றையர்கோடீச்சுரநம்பர்நாகையிற்சங்
கெறிபெருவெங்கடலேயெனைநீயினை நிங்கடலே
வெறியடிமேவிலேயேயன்பரிங்கின்னுமேவிலையே
மறிதருமாமைக்கணேமசெரியுமென்மைக்கணமே. (உகூ0)

தன்னுட்கையாறெய்திடுகிளவி.

நீறணிமேனியர்கோடீச்சுரநம்பர்நேசர்முன்போய்
கூறல்லைதாயின்றுவம்புற்றலைவாய்க்குருகிழந்து
வீறளிபார்களிரங்கக்கண்ணீர்சிந்திமெய்பசந்திவ்
வாறடைந்தென்னையொத்தாய்பிரிந்தார்கொலுன்னன்பருமே. (உகூக)

தலைமகனைநிரவிலக்குவித்தல்.

அரவக்கதிர்ச்சடைக்கோடீச்சுரேசரணிவரைவா
யுரவச்சிலம்படியாயன்பமெய்திலனைந்திரப்போ
திரவுசற்[illegible]தையெபடின்னையிட்டிவைத்திங்
கிர[illegible]ப்பாய்வராதுவனுந்தென்றுரையே. (உகூஉ)

தலைவிகுறிவிலக்குவித்தல்.

மின்போலுங்குலத்தார்கோடீச்சுரவெற்பின்வேர்துவரிற்
பொன்போன்மருதாளிடைக்கதிர்தோன்றினபூம்புனத்தின்
முன்போற்சுகங்கொளும்போற்றிடப்போமென்முந்தனையின்
றன்போடுரைத்தாள்வருநீவாம்வாவிக்கென்றங்குரையே. (௨௧௩)

வெறிவிலக்குவித்தல்.

மறிகொண்டகையரன்கோட்டீச்சுரமன்னவாணுதலாய்
நெறிகொ டன்னர்தமைத்தொட்டுநோனிங்குநீடுகவின்
முறிகொண்டதோர்ந்திலள்பேய்தொட்டதென்றெனைமூண்டகுறர்பின்
வெறிகொண்டனளதையோர்மருந்தீர்துவிலக்குகவே. (௨௧௪)

பிறர்விலக்குவித்தல்.

சேய்தந்தகண்ணினர்கோடீச்சுரமன்னசேயிழைநந்
தாய்தந்தையர்மணங்கொண்டெய்தளியார்தமக்கங்கென்ன
வாய்தந்திடுவர்கொல்லோவனையாரென்மனக்கருத்தை
யாய்தந்திடுதற்கிமையோரலர்நீயறிவித்திடே. (௨௧௫)

குரவரைவரைவெதிர்கொள்ளுவித்தல்.

ஆலைக்குளிர்வயற்கோடீச்சுரம்பரம்பொன்வெற்பிற்
சோலைக்குயின்மொழியாயன்பர்மன்றலந்தூதுவரின்
மாலைக்குழலனையாதியாங்குழறுதிவரே
பாலைக்குரியரென்றேறுதிடென்முல்லைபடர்ந்திடவே. (௨௧௬)

வினவியசெவிலிக்குமறைத்தனிமயிளம்பல்.

நன்னித்தில்லைகைவாட்டங்கண்டாங்கெனைகண்ணிடனை
கன்னிக்கடுத்ததென்னென்றுள்பெருந்தகைக்காவலனா
னன்னதுலாப்புகழ்ச்சிங்கமுன்கண்ணுற்றதாகுமென்றே
னுன்னற்கரியவர்கோடீச்சுரேசருயர்வரைக்கே. (௨௧௭)

அலரறிவுறுத்தல்.

அடியார்க்கெளியவர்கோடீச்சுரேசரணிவரையின்
முடியார்மலர்க்கொம்பர்மேலுற்றிடென்னனிமுன்னலுறு
கடியாரிவ்வூரிலெல்லைமையறியாமற்கணியுறுபூங்
கொடியாரிடர்தொறும்போயலருண்டதுகொற்றவனே. (௨௧௮)

தாயறிவுறுத்தல்.

தவளப்பொன்னீற்றரன்கோடீச்சுரவெற்பதையலின்வாய்ப்
பவளம்விளர்ப்புறச்சேப்புறநீலமென்பார்வைகண்மெய்த்
துவளத்திகழுற்றதுகண்டனைசினந்தோன்றநின்று
ளவளக்களவறிந்தாளன்றுநீவந்தகன்றபின்னே. (௨௪௬)

வெறியச்சுறுத்தல்.

பெருமையுறுபுகழ்க்கோடீச்சுரேசர்பிறங்கலன்
வருமையுறத்தனிப்போற்றிவளர்த்திட்டவன்னையின்று
கருமையுறுங்கண்ணிணைமெலிவுற்றதுகண்டனே
யொருமைகொண்டேற்றதிரண்டுபெங்காக்கிடவுள்ளினளே. (௨௪௭)

பிறர்வரைவுணர்த்தல்.

நின்னூர்தனக்கன்றுநீபோனபின்புநெடுவெளத்தின்
மன்னூரமுத்தமிழ்க்கோடீச்சுரநம்பர்மால்வரைமேற்
பொன்னூர்வரைதனிற்கொண்டெமர்பாலிப்புலவரோலா
நன்னூலிடையெழிற்காரிகைநேட்கநணுகினரே. (௨௪௮)

வரைவெதிர்வுணர்த்தல்.

எட்டார்வடிவத்தர்கோடீச்சுரேசரெழில்வரையிற்
கட்டாரணியுமெமருனைக்காணிற்களிப்பினொடு
நட்டார்களாவதன்பின்னர்நீயென்னவின்றிடினுந்
தட்டாரப்பெண்ணைத்தருவாருனக்குத்தாரிபனே. (௨௪௯)

வரையுநாளுணர்த்தல்.

கணியார்மணமலர்மாலைதந்தார்தண்கதிரவனல்
லணியார்தருகலையாவுங்கொண்டேறுற்றனனரவப்
பணியார்சடையெழிற்கோடீச்சுரேசர்கணிதரைக்கண்
மணியார்செவ்வேலவரன்றல்செய்காலமருவிதுவே. (௨௫௦)

மலர்மாலை-ஒழுங்காகப் பூத்தமலர். கலை-கலை, துகில்.

ஊர்-ஊர்-பரிவேடம்.

பாங்கிதலைமகளறிவுறுத்தல்.

பூமகள்வாழ்த்திடுகோடீச்சுரநம்பர்பொன்மலையெங்
கோமகனீதிநெறியெம்மனோர்க்குக்குறித்துரைக்கு

காமகளாயினளிப்போதப்போதுறுகாமகளுங்
காமகள்வார்மலர்த்தாரண்ணலேயுட்களிப்புறவே. (௨௪௪)

குறிபெயர்த்திடுதல்.

வேதாகமம்புகல்கோடீச்சுரம்பர்வெற்பிலங்கண்
மாதாமுன்னியிங்குமாதாதரங்கொண்டிருந்தனைக்
காதலறிந்தனள்கண்ணுலறியக்கருதுகின்று
ணாதாவினிவேறிடம்பார்த்துமின்னொடென்னுடனே. (௨௪௫)

பகல்வருவானையிரவுவருகென்றல்.

பகலூரடிகவிழைந்திட்டோன்பரவும்பாமர்திருப்
புகலூருறைபவர்கோடீச்சுரமன்னபொன்னிடத்திவ்
விகலூர்தனிற்பந்தடக்காஞ்செயலுங்கிரச்சிறந்த
தகலூரவெல்வரிற்கண்கட்டுவித்தையறிந்தனையே. (௨௪௬)

இரவுவருவானைப்பகல்வருகென்றல்.

புகலோடரிக்கண்வளையரமாதர்பொருந்துநெறி
யகலாதிராவால்கோடீச்சுரம்பரம்பொன்வெற்பி
லிகலோங்குவேலவெழிற்றேசினைநீயினிப்பகல்வா
பகலோனிரவில்வருவதின்றேயிந்தப்பாரிடத்தே. (௨௪௭)

பகலினுமிரவினும்பயின்றுவருகென்றல்.

மையுறுகண்டர்தென்கோடீச்சுரமின்னின்வாயமுது
கையுறுவேலவிருபோதும்வந்துகலந்தருந்து
செய்யகதிர்மதிவாரமிராப்பகறீயதென்பர்
வெய்யபசியுடையோர்க்கொருபோதும்விலக்கிலையே. (௨௪௮)

பகலினுமிரவினுமகலிவணென்றல்.

அரும்பேயலர்ந்திடுங்காய்தரும்வேங்கையடவியினி
வரும்பேரிரவிற்பழுக்கும்பழிச்சொல்வரிற்பகலிற்
கரும்பேய்ந்திடுவயற்கோடீச்சுரநங்கருத்தர்வெற்பிற்
சுரும்பேறியதொடையாயினியானென்சொலத்தக்கதே. (௨௪௯)

உரவோனாடுமூருமுதலியகூறல்.

இளவெண்மதிபுனைகோடீச்சுரேசரிமையவெற்ப
தளர்மின்னிடையிடைநீவளையாதுறல்சால்பலகின்

வளர்பொன்னிநாட்டிற்குநல்லூர்க்குநின்மங்கலக்குடிக்குங்
கிளர்கலஞ்சாதிக்குஞ்சாதிக்கும்வாய்மைக்குங்கீர்த்திக்குமே (உ௫0)

ஆறுபார்த்துற்றவச்சங்கூறல்.

சூராசுரர்போற்றரங்கோடீச்சுரவெற்பர்துன்னிரவி
லாராவுறுநான்வரிலஞ்சுவரோவின்றராவெனுநீள்
காரமலையுமலைபாவெறிநீரோசங்காவெனுமித
தாரதலங்காக்குமன்னுவுனக்கோதைதருங்கிள்ளையே. (உ௫௧)

ஆற்றாத்தன்மையாற்றக்கூறல்

செய்வண்டுலவுறுகோடீச்சுரநம்பர்தெங்வரைவே
ளெய்வண்டுகொண்டுமின்கைவண்டுசோருமிருங்கட்கடல்
பெய்வண்டுளிகள்கொடுவண்பயோதரம்பெய்யநிற்கு
மொய்வண்டுறுதொடையாருமோதுவெனுமுன்னரசே. (உ௫உ)

காவன்மிகவுரைத்தல்.

மின்னைநிகர்சடைக்கோடீச்சுரவள்ளல்வெற்பனிங்கு
முன்னையினன்றுவரவாக்காவன்முதிர்வடைந்த
தன்னைசிறிதுமிமையாதெப்போதுமருகுறுமெம்
பொன்னைக்களவிற்கவரவொண்ணுதினிப்புத்திக்குமே. (உ௫௩)

காமமிகவுரைத்தல்.

பொன்னகரீதிமையாரிதிலவாழ்குநர்போற்றுமத
னென்னவெளிர்மன்னநீகற்பதாருவிலகிடெங்க
ளன்னமுன்மீதுபடர்காமவல்லியணியடைந்தாள்
பன்னுமிப்போதெழிற்கோடீச்சுரேசர்பணிவரைக்கே. (உ௫௪)

கனவுநலிவுரைத்தல்.

செய்யூர்மழுவரன்கோடீச்சுரமன்னகோரிழையா
ளையாநெருநற்கனவிடைநீவந்ததுவுமயள்
கையாமலரைப்பிடித்ததுமீதுகலந்திடருள்
செய்யாதகன்றதுஞ்சொல்லிநாணாளிதெங்கித்திடுமே. (உ௫௫)

கவினழிவுரைத்தல்.

காரிலகுங்கண்டர்கோடீச்சுரமன்னகாரிகைமெய்
பீரிலகுற்றதகலாவெழிலும்பெரிதகன்ற

காரிலகுஞ்சுடர்வேலோய்நிலத்திடையங்கக்குழு
மேரிலாயிடிற்சீருளாராவர்கொலேழையரே. (௨௫௬)

நிலத்திடை-அங்கக்குழும் அங்கங்கேயுழும், அங்கத்திற்கூடும்ஏரழகு உழுமேர். சீர்-சிறப்பு, செல்வம். ஏழையர்-மாதர், ஏழையர்கள்.

தன்பதிக்ககற்சிதலைவன்சாற்றல்.

சீதளநீர்ச்சடைக்கோடீச்சுரநம்பரதிண்சிலம்பின்
மாதளவன்னநகையாளிடையென்மனமிருக்கத்
தாதளவும்பொழிலெம்மூர்க்ககன்றுன்றடங்கயற்கண்
காதளவோடித்திரும்புமுன்மீள்குவன்காரிகையே. (௨௫௭)

பாங்கிதலைவனைச்செலவுவிலக்கல்.

மகமேருவில்லினர்கோடீச்சுரேசர்வரையிறைவ
சுகமேநடந்திடுனக்குமுன்னுங்கலங்குமுன்னூ
ரகமேபிறந்திடுவேமுணர்ந்தாங்கெனணங்கைமுலை
முகமேலழுந்தவெளிதின்மகிழ்ந்துமுயங்குகவே. (௨௫௮)

தலைவனீங்கல்வேண்டல்.

சித்தரெனக்கூடலில்விளையாடியசித்தர்-ர
முத்தரம்பொன்மதிற்கோடீச்சுரமன்னமொய்குழலா
யத்தலமேகுக்குறையொன்றுளனீயருள்வைத்திங்கோ
ருத்தரம்போவெனிற்றக்கணம்போதுவனூரடைந்தே. (௨௫௯)

தக்கணம்போதுவன்-அந்தக்ஷணம்வருவேன்.

பாங்கிவிடுத்தல.

வதனமொரைந்துடைக்கோடீச்சுரேசர்வரையுறநீர்
பதமுன்பெயர்க்கும்பதந்தனிலோபிற்பதந்தனிலோ
மதன்கொடுங்கோல்கொடுசெங்கோற்கவுள்வரும்வருமுன்
கழ்வின்வருவிமொனிலேகலாகுமெங்காவலரே. (௨௬௰)

பாங்கிதலைவிக்குத்தலைவன்செலவுணர்த்தல்.

வனக்கொன்றைசூடரன்கோடீச்சுரமன்னவாணுதலா
டனக்கிங்குநம்பிரிவாற்றாதொருகணந்தானுமென
வெனக்குத்தெரியுந்தெரியுமெனக்கெனவென்மனந்தே
றுனக்குத்தெரியுமன்றேயென்றவ்வூர்க்கவருற்றனரே. (௨௬௧)

தலைவிநெஞ்சொடுபுலத்தல்.

கள்ளானவைகளிற்கோடீச்சுரேசர்நகத்திறைபொய்ச்
சூளார்மனத்தீதொடுறவாய்ப்பிரிக்கழிக்குப்பமதி

னீளாதுகல்லாயிருக்கக்கல்லாதுநினைவழிந்து
வாளாவெனைநீவருத்தவென்னிங்குமடநெஞ்சமே. (௨௯௨)

சென்றோனீடலிற்காமமிக்ககழிபடர்கிளவி.

புலமெய்த்தவர்புகழ்கோடீச்சுரேசர்புகலியின்பாற்
குலவுப்படுகணையேகண்டிலாய்செவ்வென்கொண்கனையே
நிலவுற்றிடுதிரையேயறியேன்சற்றுநித்திரையே
சலமுற்றிடுசங்கமேபுறுமோகன்பர்தஞ்சங்கமே. (௨௯௩)

பாங்கியிறைவியையாற்றுவித்தல்.

கிளர்புகழ்வேந்தர்வருகின்றனருன்றன்கேதமெலாந்
தளர்வுறச்செப்பிடுநீதளராவன்மின்றனரிடையாய்
வளர்பிறைநாளும்வளராதிருக்கவளர்சடைமேற்
களவெம்பணியுந்தகோடீச்சுரவள்ளல்காரவரைக்கே. (௨௯௪)

தலைவிக்கிறையோன் வந்தமையுணர்த்தல்

போரயிரத்தான்கோடீச்சுரவெற்பிற்பொழில்கொழு
ளாரயின்மன்னராரினினெஞ்சகத்தார்வமதைத்
தேராதவரல்லர்தேராதவன்கடற்சென்றனன்மேல்
வாராரென்றேங்கிடல்வாரரிளமுலைவந்தனரே. (௨௯௫)

பாங்கிதலைவனொடுநொந்துவினாதல்.

நன்றெனுந்தோறும்கோடீச்சுரேசன்றனதருளான்
மின்னெனுதோறும்பிறைநுதிருக்கின்றன்வேலவநீ
யென்னெனுகூறியகாலமெல்லாஞ்சென்றதெவ்விடத்தோ
வுன்னொடுகூடியிருந்ததன்றேயங்கனுன்னெஞ்சமே. (௨௯௬)

தலைவன்பாங்கியொடுநொந்துவினாதல்.

கூற்றினைவாட்டியகோடீச்சுரேசர்குவட்டிளமான்
றேற்றியமானலருமிவ்வூரினர்தூற்றலருஞ்
சாற்றிடுதிங்கள்வந்தியும்வெந்தியுந்தனியிருந்திங்
காற்றியதெப்படியெப்படியாற்றுவித்தாயணங்கே. (௨௯௭)

பாங்கியாற்றுவித்திருந்தமைகூறல்.

கருந்தாழ்குழலியெங்கோடீச்சுரேசர்கருந்தடத்தில்
வருந்தாமலின்றுவருந்தாமமார்பன்வருந்தவென்று
மிருந்தார்ப்பொழிற்புள்ளிருந்தாலுமுன்னூரெதிர்தெரித்தும்
பொருந்தார்ப்பொருந்தனிவேலநிற்போற்றியும்போற்றினனே. ()

என்பொருட்பிரிவுணர்ந்தேந்திழைக்கென்றல்.

நரைவிடைப்பாகர்தென்கோடீச்சுரமன்னகன்னுதலாய்
வரைவிடைவைத்துப்பொருட்கேகுவேனென்மனமுருகிக்
கரைவிடநூலன்னகன்னிபுற்றலங்கதழ்வளையாட்
குரைவிடைதந்திடுவந்திடுவேனிதியுன்னிடத்தே. (உசுகூ)

நின்பொருட்பிரிவுரையேயவட்கென்றல்.

வடவிழ்தாமரைக்கண்ணனுங்கண்ணனுமின்னனுற்றுத்
தேடமுன்னின்றவர்கோடீச்சுரேசர்சிலப்பிறைவ
நாடக்கசசைபக்கேகிடிவீகமுருகலைக்
கூடவகழ்த்தகலையெனுமேகலைக்கூறவட்கே. (உஎ௰)

நீடேனென்றவனீங்கல்.

கனமுறுங்கண்டர்தென்கோடீச்சுரவெற்பிற்காரிகையென்
மனமுறுமூற்சந்தனமுறுமச்சந்தனையனுமுற்
றனமுறுமத்தந்தனமுறில தக்கனவிடையா
ளினமுறுமுத்தந்தனவிலைக்காயிங்ஙனெய்துவனே. (உஎக)

பாங்கிபொருட்பிரிவுதலைவிக்குணர்த்தல்.

இருகோடிவையெயன்முலைவிலைக்காகவிறைவர்முதல்
வருகோடிணம்பணிகோடீச்சுரநம்பர்மால்வரையி
னருகேடியுச்சியிலாவதுமாலையிலாவதிங்கு
ஒருகோடிபொன்கொண்டணைகுவன்கோடியென்றுற்றனனே. (உஎஉ)

தலைவிவியிரங்கல்.

மின்னவேணியர்கோடீச்சுரேசர்வியன்சிலம்பின்
மன்னவரொன்றனைப்பித்தளேயெனவுவரைந்துதனிப்
பொன்னினுக்கேகினரொன்னுயிர்வேளம்பிற்போனபின்வர்
தன்னதையார்க்களித்தாருடன்வாழ்வரிங்கன்புடனே. (உஎங)

பாங்கிகொடுஞ்சொற்சொல்லல்.

கண்டாகலுழகற்குக்காரணந்தேர்ந்திடக்கண்கலக்கங்
கொண்டாயிதுவென்னகோடீச்சுரேசர்குவட்டிறைவர்
வண்டார்குழலியெனக்கோபிறர்க்கோவரையுனக்கோ
மண்டாரழற்சுரஞ்சென்றார்பொருட்குவகுத்துரையே, (உஎச)

தலைவிகொடுஞ்சொற்சொல்லல்.

பாருயிராம்புனறீவளிவானம்பரிதிமதி
பாருயிராம்பரன்கோடீச்சரவனைக்கேயெளியோற்
கீருயிரோர்ருயிரீருயிராயதெனைப்பிரிவுற்
றோருயிர்நீயென்றிருக்கனனீயதைபோர்கிலையே. (௨௭௫)

வருகுவர்மீண்டெனப்பாங்கிவலித்தல்.

மலைகண்டவில்லினர்கோடீச்சரசித்தர்மால்வரைமேற்
கொலைகண்டவேற்கண்ணிகாண்வெயிலாற்றுயர்கூர்பிணையி
னிலைகண்டொருமருங்கினின்றேதன்னிழலுதவுங்
கலைகண்டிடிற்பொருட்கேதுவோகலைகண்டவரே. (௨௭௬)

பருவங்கண்டுதலைவிபுலம்பல்.

சோரமெனக்கருக்கார்த்தம்புகொண்டுசிலைவளைத்துக்
காரானதுவந்தெதிர்ந்ததன்றூர்வரக்கண்டிலன்யான்
றேரார்கொலோவிதையாங்கித்திசைதேர்திரும்பிலையோ
தாரார்கடுக்கையர்கோடீச்சரேசர்தடங்கிரிக்கே. (௨௭௭)

இதுவம்பென்றல்.

கயிலாயநாதர்தென்கோடீச்சரத்துன்கருங்குழலி
னியலானதற்கஞ்சியோடியவாரிவ்விடைத்தனிநீ
பயில்வாய்த்துசற்றுப்பயங்காட்டவந்ததுபார்த்தனையிம்
மயிலாடுகின்றதுகார்காலமன்றிதுவம்பணங்கே. (௨௭௮)

தலைவிமறுத்தல்.

நகைமுலைகாண்றிதோமப்புகையெனினன்கிசைத்தாய்
புகைதனைக்கண்டுமயிலாடுமோகொன்றைபூத்திடுமோ
தகைதருகோபமுறுமோவதுவிற்றரித்திடுமோ
திகைபணியாடையர்கோடீச்சரத்துத்திகைத்தனையே. (௨௭௯)

அவர்தூதாகிவந்ததிப்பொழுதெனத்துணைவிகூறல்.

தக்கேசரிடையன்பாதங்கேசரிடையுறத்தாமிவர்ந்து
வந்தேனுனக்குமுன்னுமின்னூர்க்கென்வரவுணர்த்து
முந்தேகியென்றுகம்பாலவிடுத்தாரிம்முகிலைநயேல்
பங்கேற்றகையுமைபங்கர்கோடீச்சரப்பைந்தடத்தே. (௨௮௰)

தலைமகளாற்றல்.

ஊருங்விடையான்கோடீச்சுரமெனுமூருறையு
மோருயிரீருடற்கெவ்வாறலையுமொவ்வோரரையாய்ச்
சாருமென்றூலுங்குறைபடுமேயெனுஞ்சால்புணர்ந்து
தேருடன்மீண்டுமுற்றாதுய்விட்டாரவர்தேர்ந்தவரே. (௨௮௧)

அவனைவட்புலம்பல்.

கூடலிழைத்ததிற்கண்ணீர்சொரிந்துகுறிப்பொருநா
ணீடல்கண்டேங்கிவரிங்குறிபார்த்தின்றுநெஞ்சுருகி
வாடலுற்றுங்குரங்தேர்வாரேனுக்கியங்கிடுமே
[illegible]டேல்புரிசிவன்கோடீச்சுரத்துநம்மாருயிரே. (௨௮௨)

பாகனொடுசொல்லல்.

விடையூருமத்தர்தென்கோடீச்சுரத்தர்தம்வெற்பிவ்வான்
கடையூருங்கொண்டல்சொரிநீருமின்னைதக்கண்டமின்கண்
மடையூருநீரும்பெருவெள்ளமாகிவழியதனி
லிடையூறதாமுன்வலவாசெலுத்திடுரதத்தையே. (௨௮௩)

மேகத்தொடுசொல்லல்.

இல்லென்றவர்க்கருள்கோடீச்சுரநம்பரேமவெற்பிற்
செல்லென்றணைபிரிந்தோர்சொல்லநீமுன்னர்ச்செல்லுகின்றாய்
நில்லென்றுநான்சொலினிற்பைகொல்லோசென்றுநேர்முகிலே
வல்லென்றகொங்கைவருந்தாதுரைகான்வருந்திறனே. (௨௮௪)

பாங்கிவலம்புரிகேட்டவன்வரவறிவுறுத்தல்.

கைச்சங்கம்போயிற்றெனமெலியேலிங்ஙன்காவலர்தம்
மெய்ச்சங்கநல்கிடமேவுகின்றானமேன்மதுரை
பச்சங்கந்தேதமிழாய்ந்தகோடீச்சுரத்தாதிவெற்பி
லிச்சங்கம்வந்துன்களந்துறவேற்பவிசைக்கின்றதே. (௨௮௫)

தலைவி வலம்புரிவாழ்த்தல்.

தொண்டானவர்க்கருள்கோடீச்சுரநம்பர்தூய்வரைச்சொல்
லொண்டார்புனைபன்பர்திண்டேர்வாவெனக்கோதியெனைத்
தண்டாதலைக்குந்துயர்ச்சங்கமாற்றியசங்கமினி
வண்டாமரைக்கண்ணர்கைச்சங்கமாகிவயங்குகவே. (௨௮௬)

பாங்கிநினைத்தமைவினாதல்.

கடத்தொழிற்றில்லைப்பொதுவிற்செய்தாண்மலர்நாளுமென்னெஞ்
சிடத்துறச்செய்பவன்கோடீச்சுரவெற்பினின்புறநல்
வடத்திருமார்பவெப்போதெனுமாங்குன்மலர்கப்பூந்
தடத்தெங்களன்னமனைக்குத்துணையோவுண்மைசாற்றுகவே. (உஅஎ)

தலைவனினைந்தமை செப்பல்.

எனைத்தன்னடிமையெனத்தடுத்தாண்டருளீசர்வரி
கனைத்துலவும்பொழிற்கோடீச்சுரமின்கருமென்னெஞ்
சினைத்தன்றனைக்கொருலாரொண்டிறுக்கிமற்றிங்குவைத்தா
னினைத்திடற்கென்னசெய்வேனினைத்திலனேரிழையே. (உஅஅ)

பாங்கிதலைவியையாற்றுவித்திருந்தமைகூறல்.

மின்னவேணியர்கோடீச்சுரேசர்தம்மெய்மையரு
ளென்னனுபானந்திலும்புகழ்மாத்திரையின்னள்செவி
மன்னவுரைத்துட்கொளச்செய்துமன்னவமன்மநஞ்செ
யின்னவிறுவித்திருந்தனனிதத்திறமிந்நரே. (உஅகூ)

தலைவன்முலைவிலைவிடுத்தமைபாங்கிதலைவிக்குணர்த்தல்.

தந்தனரேரிடைபாகர்தென்கோடீச்சுரத்தடத்துத்
தந்தனமெல்லையிக்கில்லாதனநின்றனவிலையாத
தந்தனரன்பர்மற்றிந்நாளினிநீதவிர்த்திடுவி
தந்தனநீடுயரெல்லாமணம்பெறுதார்குழலே. (உகூ௦)

தலைவிநற்றாயுள்ளமகிழ்ச்சியுள்ளல்.

வேலையன்றுணைந்தென்கோடீச்சுரவெற்பின்மேவுமன்னை
யாலைவில்வேளனையாருக்குநங்கையினலையுறு
மாலைபுனைந்திடும்போதுமன்னோர்கிளைமாலையினங்
காலையங்கைப்பற்றுகாலையுமுள்ளங்களித்திடுமே. (உகூக)

பாங்கிதமர்வரைவெதிர்ந்தமைதலைவிக்குணர்த்தல்.

வேழத்துரியுனைகோடீச்சுரேசர்விரும்புமெழிற்
சோழநன்னாட்டன்பர்முன்னோர்நல்வேலையிற்றுன்னியுப
ரீழுமுநீடுகலிங்கழுமன்றறகியந்துவைப்ப
யாழனசொல்லிதந்தார்நமரேற்றனரின்புறவே. (உகூஉ)

தலைவியுவகையாற்றுளத்தொடுகிளத்தல்.

அனமேவுறுவயற்கோடிச்சுரநம்பரம்பொன்வெற்பின்
மனமேவருந்தவிறலவர்வந்தார்நன்மணஞ்செய்வித்

தினமேயடைக்குமலர்த்துற்றிடுமோச்சிறும்பர்வாய
சிவமேவியமதன்றேரோடலைவன்றெருவெங்குமே. (உ௬௩)

பாங்கிதலைவனை வாழ்த்தல்.

இன்றுடைய நமதுபார்த்தயருநம்பின்னனுமேன்
மன்றுதவந்திங்கொருமாத்திரைதனின்மாற்றிறையும்
பின்றுள்ளைகைப்பற்றியவ்வள்ளியுஞ்சேயுமுன்மேவலெனப்
பன்றுஞூர்வாழ்கவென்கோடீச்சுரேசர்பணிவரைக்கே. (உ௬௪)

மணப்பொருட்டாகவணங்கைப்பாங்கிலைகாட்டல்.

முன்பார்சிவன்றிருக்கோடீச்சுரவெற்பழுத்தநகைப்
பொன்பாவிழையுள்மணம்பொருட்டாகப்புகழணங்கை
யன்பான்மலர்தூஉய்ப்பலியோச்சிப்போற்றியருகினின்று
தென்பாலெழுங்கோகிலமொழிகேட்குந்திறத்தினையே, (உ௬௫)

அதுகண்டோன்மகிழ்தல்.

வின்றுணைவினர்கோடீச்சுரநம்பர்வெற்பிடத்தி
லின்றுண்மணம்பெறநம்வேண்டவேண்டுமிலங்குமின்காண்
மன்றுவல்கொண்டெதிர்நின்றலர்தூஉய்நமணப்பொருட்டிப்
பொன்றாணங்கைபாரவனம்மேலவர்புண்ணியமே. (உ௬௬)

ஐயறுதோழிகண்ணீர்துடைத்தல்,

அருங்கயிலாயத்தர்கோடீச்சுரமன்னவாயிழைநின்
னிருங்கதலிப்புறநின்றிடுகாந்தளெழின்மலரின்
மருங்குறுசெய்யகமலத்தலர்ந்தமலர்க்குவளை
கருங்குளிர்முத்தந்தருந்திறமென்னதுகட்டுரையே. (உ௬௭)

துடையாகியகதலிப்புறத்து நிற்கின்றகாந்தளாகியகையின்மீதுற்ற தாமரையாகிய முகத்துக்கு வளையாகியகண் - முத்தம்போல நீர்த்துளிகள்.

தலைவிகலுழ்தற் காரணங்கூறல்.

தார்வார்தருசடைக்கோடீச்சுரநம்பர்தாரவெற்பைச்
சேர்வாரத்தெற்றனைச்சேர்வாரமன்னர்சிறிதுநன்மை
யார்வார்தாமுன்றனக்கிழைத்தாரென்றன்றுரைத்
தீர்வாருமென்றிடீர்தனையேவுதலென்னையே. (உ௬௮)

MAHAMAHOPADHYAYA DR. U.V.S. IYER LIBRARY BESANT NAGAR, MADRAS-90

தெய்வங்காட்டித் தெளிப்பத்தெளிந்தமைகூறல்.

வெஞ்சமர்ச்சூற்படைக்கோடீச்சுரவள்ளல்வெற்பரினி
யஞ்சலுனைப்பிரியேனெனவதேவின்முன்றுங்குரைத்தல்
வஞ்சகமென்பதறியேனிதுவன்றிமற்றதனை
யஞ்சனம்பார்த்தகண்ணெஞ்சிற்குமோதியமுழிகின்றதே, (௨௯௯)

தலைவிதலைவனிகந்தமையியம்பல.

வேதாந்தமேவியகோடீச்சுரசித்தர்வெற்பனெனக்
காதாரமானவராதாரமென்பதகங்குறியார்
தாதார்பொழிலிடைத்தாம்புணர்ஞான்றங்குத்தாழ்ந்திருந்த
போதாகரிசொல்லப்பேதாவெனகர்ப்போயினரோ (௩௱)

அதுகேட்டபாங்கியியற்பழித்தல்.

நல்லார்தொழுந்திருக்கோடீச்சுரத்துறைநம்பர்வெற்பின்
வல்லார்முலையந்தவல்லாளர்க்குன்றன்மனமருவு
வில்லாரமுன்முன்மொழிகொத்தருகிமெலிதலுறும்
கல்லார்மனமெனக்கல்லாயிருக்குமக்காவலர்க்கே. (௩௱௧)

தலைவியியற்படமொழிதல்.

வள்ளம்புலிபுனைகோடீச்சுரேசர்வரைத்தண்பொன்னி
வெள்ளஞ்சிலதினந்தாழினுமாங்குடன்மேவிப்பைங்கூ
ழுள்ளங்குளிர்ந்திடப்பாய்வதுபோலன்பரொண்டொடிநான்
கொள்ளஞர்நீக்கிப்புரப்பான்கருதிக்குறுகுவரே, (௩௱௨)

தெய்வம்பொறைகொளச்செல்குவமென்றல்.

சொரிவள்ளநான்கோடீச்சுரவெற்பர்சூளுரைத்துப்
பிரிவண்ணினரொன்றவர்பால்வெகுளேல்பிரிந்திடினும்
பரிவதெம்பாலுளர்தென்னோரகத்துப்பாம்பொருளே
விரிவடிவேலவென்றேத்துவம்வாசென்றுமெல்லியலே. (௩௱௩)

தலைவியில்வயிற்செறித்தமையியம்பல்.

விடவாளரவணிகோடீச்சுரவள்ளலவெற்பிலிவ்வூர்
படவாரகடூற்றுமலரையுமென்றுயர்மாலையும்பார்த்த
தடல்வாள்விழியிவந்திம்மனைநீங்கலென்றம்மனைவன்
றடவார்[illegible]புலாய்முன்புற்றெவனைச்சாற்றினளே. (௩௱௪)

செவிலிகனையிருளவன்வரக்கண்டமைகூறல்.

மாலொருபாகன்றென்கோடிச்சுரத்தனைவாழ்த்திறைவர்
வேலொடுமென்னைவிராவிற்குறியுற்றுமீண்டுசெலுங்
காலொருகள்வனிங்கேகலுற்றனென்றனைச்செரித்தான்
பாலொடுதேனன்னசொல்லாயனைநான்பயந்தனனே. (௧௱௫)

ஏறிவனைவேற்றுமைக்கேதுவினாவல்.

செய்திகழ்சூலத்தர்கோடிச்சுரம்வாழ்திருத்தர்வெற்பிற்
பொய்திகழ்நேரிடையாய்புனைநீத்திங்குப்போந்தபின்மின்
மெய்குழையுற்றதனைப்பால்சரிகொண்டுமெங்கைவெறி
தெய்திடக்கங்கணங்கண்கொண்டதென்னிதெனக்குரையே. (௧௱௬)

கூந்தல்சரிந்து, கைவளைபோய், வெறிசாதக. கங்கணம்-நீர்த்துளி.

பாங்கிவெறிவிலக்கல்.

தோட்டுக்குளிர்பொழிற்கோடிச்சுரத்துறைசோதிவரை
வேட்டுக்குறவர்கள்பல்லோர்முனென்னைவெருளலன்னே
காட்டுக்குள்வாழிவ்வணங்கையுங்கேளொருகாலத்துமிவ்
வாட்டுக்கும்பாட்டுக்கும்போகாதுமங்கையருந்துயரே. (௧௱௭)

வெறிவிலக்கியவழிச்செவிலிவினாதல்.

காதார்குழையரன்கோடிச்சுரவள்ளல்காதலனை
வேதாவைவெஞ்சிறைவைத்தோனைநாங்கண்மிகப்பணிந்து
போதார்குழலிதுயர்தீர்க்கும்போதிங்குப்போந்தணங்கே
நீதான்றடுத்ததென்னீதாமென்றோதுநெறியிதற்கே. (௧௱௮)

பூத்தருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

கின்னடிநோக்கிப்பயமுற்றுநீடுகண்ணீருடனே
பன்னுமிப்போதங்கிருந்ததிதனைக்கண்பார்த்திடெனக்
கன்னலஞ்சொல்லிகைத்தந்தானொருவன்முன்கார்ப்பினத்தொன்
றின்னதறிகுவன்கோடீச்சுரேசரிமையத்திலே. (௧௱௯)

புனறருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்,

மன்றினுளாடல்செய்கோடீச்சுரம்பர்மால்வரைப்பா
லன்றொருநாளணங்கன்னாரொடும்விளையாடிடுங்கால்
மன்றற்குழலம்முனிபோலப்பொன்னிவலஞ்சுழிவாய்ச்
சென்றிடல்பார்த்துற்றெடுத்தளித்தானொருதிண்ணியனே. (௧௱௰)

அம்முனி-அந்தவேரண்டமுனிவன்போல

களிறுதருபுணர்ச்சியாலறத்தொடுநிற்றல்.

அங்கைக்கனலான்கோடீச்சுரவெற்பினெஞ்சிமுன்செல
வெங்கைக்களிறொன்றுமெல்லியலாடனிமேவல்கண்டு
கொங்கைக்களிறொடுபோர்க்குறல்பார்த்ததிற்கூடொருவன்
செங்கைக்கதிர்வெனெறிந்தவட்காத்தன்மைசெயெனவே. (௩௧௧)

தலைவிவேற்றுமைகண்டுநற்றாய்செவிலியைவினாதல்.

பொன்னகக்கோட்டரன்கோடீச்சுரமன்னபூங்கொடிமெய்
மென்னலுக்கின்றுமெலிந்ததவிர்ந்ததுநீள்பசலை
துன்னருங்கைவளைகாணேன்விழிப்புனல்சோர்வுகண்டே
னின்னளிவ்வின்னலிங்கேயவதற்கேதெதுவின்னகையே. (௩௧௨)

செவிலிநற்றாய்க்கறத்தொடுநிற்றல்.

சினங்காலுமொற்றரன்கோடீச்சுரமன்னசேயிழையாய்
புனங்காவல்செய்திடும்போதொருநாளங்குப்போந்தெனது
மனங்காண்கிலேனைத்தாட்டுதியென்றொருமானவனின்
னனங்காமுறுநடையாண்மனங்கைக்கொண்டகன்றனனே. (௩௧௩)

நற்றாய்தமருக்கறத்தொடுநிற்றல்.

மருத்தண்கடுக்கையர்கோடீச்சுரவெற்பில்வாழ்குவிர்நம்
முருக்கனைமூரன்முதுக்குறைந்தாளினிமுன்னுமவள்
கருத்துக்கிசைந்தநற்றந்தம்குரல்குயின்கந்தனுக்குத்
திருத்தகுவள்ளியைமுன்னீந்துவந்ததிறமெனவே. (௩௧௪)

பாங்கிதலைவற்குடன்போக்குணர்த்தல்.

வின்மதிசூடான்கோடீச்சுரவெற்பின்மேவரீச
வன்மதயானைபலதந்தியாயினும்வன்குறவர்
மென்மடமானையெளிதினல்காரிருள்வேலைமெள்ள
நின்மதில்சூழூர்க்குடன்கொண்டுசெல்லென்னினைவிதுவே: (௩௧௫)

தலைவனுடன்போக்குமறுத்தல்.

வயுஞ்சுடர்க்கண்ணர்கோடீச்சுரமின்னிடைகடத்திற்
பேயுஞ்சுழல்கட்புலியுமுளாமதன்பேருரைத்தால்
வாரிஞ்சுடுமெண்மணமுஞ்சுடுமிகமற்றகனி
லாயுஞ்சுடர்த்தொடியன்னமுன்னெவ்வாறடிவைப்பதே. (௩௧௬)

பாங்கிபோக்குடன்படுத்தல்.

மாலையன்போற்றிடுகோடீச்சரத்தர்மால்வரைக்க
ணாலையனங்கவெனப்பாயுனடைடங்காலனைய
பாலையிற்கள்ளியங்காடுமெவெங்காலும்படர்தழலுஞ்
சோலையுந்தென்றலும்வாவியும்போலுந்துடியிடைக்கே. (௩௧௭)

தலைமகன்போக்குடன்படுதல்.

கருந்திருக்கண்டர்தென்கோடீச்சரமன்னகன்னிதனிப்
பருந்து…றக்குநிழலூடு… லும்பருந்தழற்கான்
வருந்திறமில்லவளாருந்திடுமென்றென்மனந்தடுத்தும்
பொருந்தினனின்…சாற்றடுக்கா…துநான்கொடுபோவதற்கே. (௩௧௮)

பாங்கிதலைவிக்குடன்போக்குணர்த்தல்.

உன்னிடமேவான்கோடீச்சரவெற்பருநங்கள்கன்னி
பன்னிடுவேலைப்பணிவரல்லாதங்கப்பாலையுறு
கன்னியைக்கண்டுபணிந்திலளேயெனக்கட்டுரைத்தார்
முன்னியநேர்ந்திலம்பின்னியநாண்மலர்மொய்குழலே (௩௧௯)

தலைவிநாணழிவிரங்கல்.

கனத்தினைநேர்கண்டர்கோடீச்சரவெற்பின்கண்ணுறுமென்
றனத்துடன்றோன்றியென்கண்மணிபோலத்தணந்தலின்றி
மனத்துணைபாங்கியிருந்திடநாண்முன்மதிநுதலாய்
வனத்திடைச்சென்றதுநானெகுவேனிறைவன்பின்னன்றே. (௩௨௰)

கற்பின்மேம்பாடுபாங்கிகூறல்.

தேனாட்டுகொன்றையர்கோடீச்சரத்தர்தென்சிலம்பின்
பானாட்டினைவிட்டுப்பாநாட்டுமென்மொழிப்பாவைவெம்முட்
கானாட்டுங்கானுஞ்செலவோர்பெரிதன்றுகற்புடையோர்
வானாட்டினுஞ்செல்வர்த்தேயம்விட்டுமகிழ்நர்பின்னே. (௩௨௧)

தலைவியொருப்பட்டெழுதல்.

வன்னெஞ்சிடத்தகல்கோடீச்சரேசர்மணிவரைக்கண்
மின்னெஞ்சுறுமிடையாய்நீயெழுதுயர்வேலைவிட்டென்
றன்னெஞ்சுங்காவலர்தந்நெஞ்சுங்கூடியிங்கோடுங்கா
லென்னெஞ்சுமாறுசொலுமோவதுவுமிசைக்கின்றதே. (௩௨௨)

சுரத்தியல்புரைத்துழிச்சொல்லல்.

நீங்காவலர்பழைதன்னொடுதாய்சினநீள்கடவிற்
பாங்காமுழுவெம்மைமையப்பாலைப்படுதழற்கட்
போங்காலகற்றிடுங்கோடீச்சுரேசர்புகழ்வரைக்க
ணாங்காதரவுற்றிருப்பேன்பின்னீயுமணையணங்கே. (௱௨௩)

கையடைகொடுத்தல்.

பம்பாலடியுறைகோடீச்சுரவள்ளல்பைபொன்வெற்ப
கொம்பாமருங்குலுக்காவியுநாணுங்கொழுநனுநீ
நம்பாவருமின்னவடனைக்காத்தியிங்கினினின்று
ளம்பாலொருபாலுருவனபோதினுமன்புவைத்தே. (௱௨௪)

பாங்கிவைகிருள்விடுத்தல.

சொன்றூடுபூவையையீவார்வையீந்தன்னைதுன்பகற்றி
மூன்றாழலினவர்தூற்றும்வாய்களைமூடியுங்கள்
பின்றாடியைப்பிடியாவருவேன்பிடிநடைமுன்
கொன்றார்கணிச்சியர்கோடீச்சுரந்தனைக்கூடுகவே. (௱௨௫)

தலைவன்சுரத்துய்த்தல்.

வெண்டிருநீற்றான்கோடீச்சுரவெற்பில்வெவ்வெயின்முன்
வண்டிகிற்சென்னியிற்சேர்நுதலார்வெயர்மாற்றிடுகான்
மண்டழற்கல்வினிடுறுதுமெல்லெனவாநிழன்மேற்
கண்டுழிவைகுவங்கண்டதைப்போலுங்கனிமொழியே. (௱௨௬)

தலைமகன்பொழில்கண்டுவியத்தல.

இருக்கோவிடும்புகழ்க்கோடீச்சுரவிறையின்னருளாற்
பெருக்கோகைமேவக்கழிப்பாலைப்பாங்கர்ப்பெருமணஞ்சார்
திருக்கோலக்காவெதிர்கண்டேயிதில்வைகிச்சென்றிடுமென்
றுருக்கோகிலமுனையழைக்கின்றதுநகைமெயொண்டொடியே. (௱௨௭)

அசைவறிந்திருத்தல்.

கொடியிடையேற்றான்கோடீச்சுரனேர்கொடியிடைநின்
னடிமலர்சேர்ந்ததுமெய்யோதுவண்டதணிநுதல்வேர்
வடிகருகின்றதகன்மணற்சூடழன்மண்டியதிக்
கடிமலர்க்காவிலுறைவோந்துயரங்கடியளவே. (௱௨௮)

உவந்தலர்சூட்டியுண்மகிழ்ந்துரைத்தல்.

சிவந்தபொன்மெய்யான்கோடீச்சுரமன்னசேயிழைநா
ணவந்தருபாலைத்துயர்தீர்ந்திடநின்னடிபிடித்திட்
டுவந்தலர்சூட்டியவோதியைப்பார்த்தென்கணேறிடுமோ
னிவந்திடுங்கோர்பொழிற்பூக்கதுபாவென்றென்னெஞ்சினுக்கே. ()

கண்டோரயிர்த்தல்,

வருவார்பான்றிருக்கோடீச்சுரந்தனில்வாழ்பவரோ
மருவார்தருவிண்ணுலகினரோவிஞ்சையல்லவரோ
வுருவார்மதனுமிரதியுமோவொன்றுமோர்ந்திலமால்
வெருவார்சுரத்துறவேபோகநிமித்தமிமேலவர்க்கே. (கூ௰)

கண்டோர்காதலின்விலக்கல்.

மலைவில்லான்றிருக்கோடீச்சுரந்தனைவாழ்த்தலர்போன்
றலைசீட்டவன்மேற்கடலாழ்ந்தனனூருகினியீண்
டிலைமற்றிவளுமெளிந்தாளிவெம்மலைமருவிக்
கலையினுரியிற்றுயின்றெழுந்தேகைபகலையிலே. (கூ௰க)

கண்டோர்தம்பதியணிமைசாற்றல்.

குன்றிதுதன்னைக்கடந்துசென்றாலெதிர்கோபுரமு
மின்றிசழ்மெல்லிடையார்விளையாடுபொன்மேடைகளுந்
துன்றிணர்ச்சோலையுமாகிவில்வேலவதோன்றுந்தில்லை
மன்றினுளாடல்செய்கோடீசனோரண்டமாபுரமே. (கூ௰உ)

தலைவன்றன்பதியடைந்தமைசாற்றல்.

இதுதான்சிவன்றிருக்கோடீச்சுரமிதிலீதான்றேர்
விதுவைக்குறைபடச்செய்ம்முகத்தாய்துகின்மென்கொடிநீ
டதுமமனையிதுவேதியராவணமாவணமீ
துதுதண்கமலத்தடமிதுகாவிரிபொன்னதியே. (கூ௰ங)

செவிலிபாங்கியைவினாதல்.

சாற்றுயெனக்குண்மையெங்கேகினுள்வஞ்சிதண்சுனைக்கோ
மேற்றுதுகுமலர்ப்பைம்பொழிற்கோவிங்குமென்கிளிகூஉய்த்
தோற்றுகுலமுறவாரமைந்தேகினர்துயவிடை
யேற்றார்கொடியான்கோடீச்சுரமன்னவேந்திழையே. (கூ௰ச)

பாங்கிசெவிலிக்குணர்த்தல்.

மருதவனத்துறைகோடீச்சுரநம்பர்மால்வரையாம்
பருவங்குறிஞ்சியினையதனுற்றுதியிற்பாங்கினுட

ஒருகண்மலர்முல்லைமாலைதந்தான்றனுடைந்தாள்
கருதுநின்பாலைநலங்கவிழ்த்தாரிற்கலங்கலனையே. (௧௧௫)

செவிலிதேற்றுவோர்க்கெதிரழிந்துமொழிதல்.

நெருங்கிதழ்க்கொன்றையர்கோடீச்சுரம்பர்மேரியினுன்?
மருங்குவைத்தான்மருங்கென்றுமேற்றிவளர்த்தயில்
சரங்கொண்டிடமருந்திங்கெதிர்பண்டிதஞ்சொன்னவளைக்
கருங்குழலீரிங்கறியேனினியேன்கலங்கினனே. (௧௧௬)

செவிலிநன்னறிவின்மைநன்னைநொந்துரைத்தல்.

ஓங்கருளீசர்தென்கோடீச்சுரவெற்புறையுமலர்த்
தேங்கமழ்கோதையிமொன்சொல்லுமென்றளிச்சிறடிமுன்
வேங்கடநல்லதலங்கொலென்றுண்மிக்கமன்னைத்தென்றே
றோங்கவெண்ணமுய்த்தோர்ந்திலஞ்சென்றுளருஞ்சுரமே. (௧௧௭)

செவிலிதெய்வம் வாழ்த்தல்

அன்னோர்மிடற்றினர்கோடீச்சுரேசருண்மதலாய்
தென்னோரகமன்னகன்னோரங்கொடுசென்றவள்வந்
தென்னோரகமுறச்செய்தனையேனுன்னெதிர்சிறக்கவோர்
மன்னோர்மயில்விடுத்தெங்கோமுழுனைவாழ்த்துவமே. (௧௧௮)

செவிலிநற்றாய்க்கறத் தொடுத்தல்.

வேலைநஞ்சுண்டவர்கோடீச்சுரமன்னமெல்லியலாய்
காலையிற்சார்ந்திதையுச்சியிற்கூடெனக்கையிலொரு
மாலைதந்தானொருமாலையொப்பானைதவாங்கிதம
பாலைப்பாலையிடத்தாங்கவன்பின்படர்ந்தனளே. (௧௧௯)

நற்றாய்பாங்கியொடுபுலம்பல்.

புகழிற்பரிந்துறுகோடீச்சுரேசர்பொருப்பிடத்து
மிகழிங்கொருவன்றன்மாலையுற்றனளிவணீடனவே
திகழிக்குறிப்புமுன்னீபுகைத்தாண்மணஞ்செய்தவற்கே
மகளியனேக்கிவிடுவேலகெடுத்தாய்மடமகளே. (௧௨௰)

பாங்கியொடுபுலம்பல்.

தாரிருந்தார்சடைக்கோடீச்சுரேசர்தடஞ்சிலம்பின்
வாரிருந்தாரம்புனைமுலையீரந்தமன்னிருந்தே
ஞாரிருந்தாலென்னிளமானடைந்தவருஞ்சுரத்தி
னீரிருந்தாலிங்கிவ்வாறலையாதென்றனெஞ்சகமே. (௧௨௧)

அயலாரொடுபுலம்பல்.

விண்பெற்றகீர்த்தியர்கோடீச்சுரர்கீதர்வெற்புறுமென்
பண்பெற்றசொல்லியெனைவிட்டுப்போற்றியபாவிகைவிட்
டெண்பெற்றவன்பின்னடந்தாண்மகிழன்மினைந்திழையீர்
பெண்பெற்றபோதேதணியாத்துயரமும்பெற்றனமே. (௧௪௨)

பயிலிடத்தொடு புலம்பல்.

கிளையாடகவில்லர்கோடீச்சுரேசர்கிரிதனிலவர்
கிளையடும்பொழிலேபுனமேமலர்நீர்ச்சுனையே
வளையாடுகையினளும்மொடொப்போதுவருவளென்றாள்
விளையாடத்தேடுமப்பேதையர்க்கோதவிளம்பிடுமே. (௧௪௩)

நிமித்தம்போற்றல்.

மின்னார்சடையண்ணல்கோடீச்சுரமன்னமெல்லியலை
யுன்னுவெளிமேயன்கரையாமணிநகைவுற்றுத்தவிர்
பொன்னார்கலந்தனிற்ப யசலூறு போனகமு
மன்னுநரவொடுனைக்களிப்பேன்செம்பில்வாழ்கொடியே (௧௪௪)

சுரம்பாலைநிலம்-பண்டிதம்-முன்னவருக்கிதபேசினவர்.

சுரந்தணிவித்தல்,

மேலையுறுவெங்கதிரேயெவருக்குமித்திமனே
மாலையிடங்கொண்டகோடீச்சுரேசர்வரைதனில்விற்
கோலைநிகர்தருங்கண்மலர்வஞ்சிக்கொடிபடர்ந்த
பாலையைநீடுமருதமென்றேகிடப்பண்ணுகவே. (௧௪௫)

மென்மைத்தன்மைக்கிரங்கல்.

ஆய்ந்தார்புகழ்ந்திடுங்கோடீச்சுரேசரணிவரைமேல்
வாய்ந்தாரமுதொத்திருந்திடுபேதைமலர்மிதிக்கி
லேய்ந்தாகுலமுறுமெவ்வாறுற்றாள்கடலேழும்பொங்கிப்
பாய்ந்தாலும்வெம்மைதணியாதசெந்தழற்பாலையிலே. (௧௪௬)

இளமைத்தன்மைக்கிரங்கல்.

சோதிமுழுமுதல்கோடீச்சுரவிளந்தோகையுன்ற
னோதிமுடிப்பவராரங்கணமெடுத்தூட்டுவரார்
தாதிமுதலோரிலரேயென்செய்திரழற்சுரத்தி
லாதிமுடியிவ்வாறேபொழுதினனானனே. (௧௪௭)

அச்சத் தன்மைக்கச்சமுற்றிரங்கல்.

சொல்லுஞ்சுருதியர்கோடீச்சுரேசர் துணைமலர்த்தா
ளெல்லும்பகலுங்கருதாதவர்செல்லருஞ்சுரத்திற்
கொல்லுங்கரியுந்தழலுமங்கைதையோகுறுகவெதிர்
புல்லும்பொழுதென்னெஞ்சுறுமேநம்பபொன்னுளமே.(௱௪௮)

கொல்-பொற்கொல்லன். கரிகரி-யானை. பொன்-பொன்னொத்தமகள்.

கண்டோரிரக்கம்.

செழுவாம்பொழிசிவக்கோடீச்சுரத்தின்றிசைகுறித்துத்
தொழுவாள்வளர்த்தவளின்றுளிப்பாவிதுடிக்குமெதி
ரழுவாள்வன்பாங்கிபுலம்புவளாதிபராங்கயர்ந்து
விழுவார்கள்பாங்கியர்சென்றகின்னூர்கடம்மெல்லுயிரே, (௱௪௯)

செவிலியாற்றுத்தாயைத்தேற்றல்.

பங்கேருகத்திருவன்னாள்பொருட்டப்பருவாலுற்
றிங்கேவருந்திடல்கோடீச்சுரேசர்தமின்னருளா
லெங்கேயிருக்கினுமின்னேகொணாவலிமைப்பொழுதி
லங்கேழணிபொற்றொடியாளைமெற்றவனையுமே. (௱௫௰)

ஆற்றிடைமுக்கோற்பகவரைவினாதல்.

பகையாறுவென்றைந்தடக்கியொண்ணான்மறைபாடிமுக்கோல்
வகையாக்கரங்கொண்டிருகெறிபோர்நனிவக்கெதிர்த்த
தகையார்முனிவிர்முன்கோடீச்சுரேசர்தடங்கிரிவாய்த்
திகையார்தனத்தெங்கண்மானொருகாளைபின்சென்றதுண்டே, (௱௫௧)

மிக்கோர்ஏதுக்காட்டல்,

நனையின்றகொன்றையர்கோடீச்சுரவெற்பிணையன்மின்னே
தனையீன்றவளைவிடுத்தணிவாரிடஞ்சார்ந்திடுமுத்
தனையீன்றவளிவினீபுமுற்றாயிலையுங்கரு
மனையளொருவன்பின்சென்றாளலகியல்பாயிதுவே. (௱௫௨)

தனையீன்றவளை-தனையீன்றசங்கம
நகைக்கின்றனை-அரும்புகின்றாய்-கள்ளம்-வஞ்சம்-அழகியதேன்

எயிற்றியொடுபுலம்பல்.

கோளரடாவணிகோடீச்சுரேசர்குவட்டின்மத
வேளாசுகவிழிபேடர்மின்னேயொன்றுவிள்ளவின்றி

வாளாவிருந்திப்பாராவதமென்மகளொருத்த
னீளாநிழல்வரக்கண்டனையோவிங்குநின்றனையே. (௧௫௩)

குரவொடுபுலம்பல்.

விடத்தேசமர்கண்டர்கோடீச்சுரகம்பர்வெற்புறுமென்
மடத்தேமொழியொருகாளைபின்னுமுன்னர்வந்ததுண்டோ
கடத்தேமலர்க்குரவேநகைக்கின்றனைகள்ளமுண்ட
னிடத்தேயிருக்கின்றதுமெலிந்தேன்புகலென்றனக்கே. (௧௫௪)

சுவடுகண்டிரங்கல்.

கண்டேயிருவாடியுமிக்கானுடன்னகைபுயங்
கொண்டேநடந்தனன்போலுமுட்காகநக்கோற்றொடியைப்
பண்டேமொழிபங்கர்கோடீச்சுரவித்தர்பைம்பொன்வெற்பி
லுண்டேயிவ்வாறுசுமந்தேகிடுமிலவும்பருமே. (௧௫௫)

கலந்துடன்வருவோர்க்கண்டுகேட்டல்.

மதனுமிரதியும்போல்வருமீரொருவார்த்தைநந்தன்
விதனங்களைந்திடுமும்மையொப்பாளொருவித்தகனு
மிதரங்கையுமிக்கெறியேயுமக்கெதிரேகினரோ
வதநமொரைந்துடைக்கோடீச்சுரேசர்வரையருகே. (௧௫௬)

அவர்புலம்பதேற்றல்

அன்னையொப்பாளெதிர்நான்கண்டகாளையுமவ்விடத்திப்
பொன்னையொப்பாள்கண்டமெல்லியலாளுமிப்போதுசென்று
தன்னையொப்பாம்புனற்பொன்னிபின்பாங்கர்ச்சடாடவியின்
மின்னையொப்பார்மகிழ்கோடீச்சுரநகர்மேவுவரே. (௧௫௭)

செவிலிபுதல்வியைக்காணாதுகவலைகூர்தல்.

வன்னுகவில்லான்கோடீச்சுரந்தனைவாழ்த்தினர்தந்
துன்னுமொளிசுரத்தெங்கணுங்காண்கிலன்றோகையையென்
பொன்னுடிநும்பினளோவெனுந்தாய்க்கென்புகல்வனினி
யன்னுமுயிர்தரியாதரியாதென்றனாவியுமே. (௧௫௮)

தலைவிசேணகன்றமைசெவிலிதாய்க்குரைத்தல்.

நிலையாகியசெல்வமின்னைவருந்தியுநேரிழையைத்
தொலையாதவெஞ்சுரங்கானகஞ்சோலைநடுமொளியொவ்வோ
ரிலையாகத்தேடினன்காணேன்வளர்ந்தவேந்தனுடன்
சிலையானவெற்பினர்கோடீச்சுரநகர்சென்றிடுமே. (௧௫௯)

தலைவன்றம்மூர்சார்ந்தமைசாற்றல்.

தேன்வந்தகொன்றையர்கோடீச்சுரேசர்செழுஞ்சிலம்பின்
மான்வந்ததன்னமின்னேயுன்றன்மீதொருமால்களிறு
தானவந்தெதிருற்றவ்விடமீங்கிதுதண்புனமே
கான்வந்துனைக்கண்டகாவின்னதன்னதுசம்பதியே. (௱௬௰)

தலைவிமுன்செல்வோர்தம்மோடுதான்வரல்பாங்கிற்குணர்வித்தல்.

முற்றுமுலையங்கர்கோடீச்சுரதகெனைமுன்னியிளங்
கற்றுவெனையும்பாங்கியர்பான்மறைகற்றறிந்த
நற்றுயனைததொடையிருள்ளநாண்முற்றுநங்குவிற்று
விற்றுமவேந்தலொடுநானவான்முன்விளம்பிடுமே. (௱௬௧)

முன்சென்றோர்பாங்கியர்க்குணர்த்தல்.

பரந்தீண்டமுன்மின்பறிகொடுத்தோமென்றுபாவையுற்ற
சுரந்தீர்த்தன்றென்றுமபால்விளையாடற்குத்துன்னினண்முப்
புரந்தீயுறப்புரிகோடீச்சுரேசர்புகழ்வரைமே
லரந்தீட்டுவாளன்னகண்ணீர்முன்சிற்றிலமைத்திடுமே. (௱௬௨)

பாங்கியர்கேட்டுநற்றாய்க் குணர்த்தல்

கொந்தாரம்போல்விழிநீர்சொரிபேலொருநோவுமின்றிச்
சந்தாரிளமுலைகோடீச்சுரேசர்தமதருளால்
வந்தாளிறைவனொடுமீண்டெனச்சிர்வந்துமொழி
தந்தாளன்னையின்றுநான்பயந்தாயந்தத்தையலையே, (௱௬௩)

நற்றாய்தலைமகனுளங்கோள்வேலனைவினாதல்.

காலாரணன்பணிகோடீச்சுரேசர்தந்நாட்டிலுறு
வேலாவுனையொன்றுகேட்கலுற்றேன்தாமீண்டுவருங்
கோலாகலன்மின்னையென்மனைக்கேயுறக்கூட்டிடுமோ
பாலாவிதன்மனையுய்க்குமோவெண்ணிப்பார்த்துரையே. (௱௬௪)

நற்றாய்மணையர்வேட்கையிற்செவிலியைவினாதல்.

பொன்மலர்ச்செஞ்சடைக்கோடீச்சுரேசனைப்போற்றிறைவன்
றன்மனைப்பான்மின்னைக்கொண்டேகினுமவன்றாயொடுநா
முன்மனைப்பான்முற்சிலசடங்காற்றிமெல்லோதிதனக்
கென்மனைப்பான்மணஞ்செய்திடச்செய்கென்றியம்புவமே. (௱௬௫)

செவிலிக்கிகுளைவரைந்தமையுணர்த்தல்.

தகாததனிவரியாறைந்திளர்வந்து சாற்றினர்தந்
நகர்த்திலேதந்தமர்குழுமன்றனவின்றனராம்

பகரத்தலைவர்நம்மொண்ணுதலாட்கியல்பாங்கிகொடு
மகரத்தடங்குழைக்கோடீச்சுரேசர்வரையணையே. (௧௬௬)

தகரவரி-ஆறைந்து, தூது.

வரைந்தமைசெவிலிநற்றாய்க்குணர்த்தல்.

மாதிவணீமுன்புகோடீச்சுரேசர்வரத்திற்பெற்ற
பாதிரியோடுபருதியினாப்பண்பகரிருசொல்
லாதியுமீறும்புணர்பேர்முன்னாகினளவ்வரச
னேதிடமற்றையதானான்மணந்தங்களுரிமைத்தே. (௧௬௭)

மாதிவணீ-மாதேயிங்குநீ. பாதிரிபருதி. இவ்விரண்டினடு-திரு. இவ்வி
ரண்டினாதியுமந்தமும் புணர்ந்தபேர், பாரி, பதி.
திரு, பாரியானாள். அவன் மற்றையதாகியபதியானான்.

தலைவன்பாங்கிக்கியான்வரைந்தமைநுமர்க்கியம்பென்றல்.

கந்தனந்தாதைதெனகோடீச்சுரமன்னகன்னிமுன்பு
தந்தனன் மாலையெமக்கின்றெம்மாலையைத்தன்கழுத்திட்
டந்தவரீடுமெம்மூர்மன்றலாற்றியனையவொடு
வந்தனம்வந்தனஞ்செய்வானுமர்க்குரைவாணுதலே. (௧௬௮)

பாங்கிதானதுமுன்னேசாற்றினேனென்றல்.

மால்பற்றிடத்தினர்கோடீச்சுரவரையாரெழமர்க்குப்
பால்பற்றியநுமர்தம்முன்புநீமணப்பகரின்மின்
கால்பற்றியதுமென்மந்திரமோதிக்கைபற்றியதாம்உம்
மேல்பற்றியமன்னமுன்னேயுரைத்தேன்மிகமகிழ்ந்தே. (௧௬௯)

நீங்குங்கிழத்திபாங்கியர்க்குத்தன்செலவுணர்த்திவிடுத்தல்.

இல்லத்தும்பாலுறநெஞ்சோதிற்றன்னைதையேனுங்கற்பு
மெல்லத்தடுத்தழைத்தேகவிற்போவலென்வேந்தர்பின்னென்
றொல்லத்துடியிடைப்பாங்கியர்க்கின்செலவோதிச்சென்மின்
சொல்லத்தகையான்கோடீச்சுரவெற்பிற்றாபவனே. (௧௭௰)

தலைவிதன்செலவீன்றாட்குணர்த்துவிடுத்தல்.

சேவையுகைப்பவர்கோடீச்சுரேசர்சிலம்பிலென்றன்
பாவையெங்கேகினளென்றழுந்தாய்க்கென்பணிவுரைத்துக்

கோவைவிரும்பியுடன்போதலுஞ்சொல்லிக்கூட்டுறுமென்
பூவையைப்போற்றச்சொன்னேனென்றுமோதுமின்பூசுரரே. (௩௭௧)

நற்றாய்க்கந்தணர்மொழிதல்.

தெள்ளம்புலிபுனைகோடீச்சுரேசர்சிலம்பிடத்து
வெள்ளம்வருமுனனைகோலிடாதுமேற்பட்டபேர்
துள்ளமுருகியென்கண்டேமுன்பெண்ணையங்கோதுமொரு
வள்ளல்பின்சென்றாள்வருவாள்சின்னாளின்மனைக்கணங்கே. (௩௭௨)

தமர்பின்சேறலைத்தலைவிகண்டிரங்கல்.

ஆனவிதற்கென்னசெய்வோமிறையையருக்கனைமேற்
றானவர்சூழ்ந்திடுமாறெனப்போர்செயத்தாவிநர்தங்
கானவர்சூழ்ந்தனர்வில்லம்புவேல்வளைகைப்பிடித்து
வானவர்சூழ்ந்திடுகோடீச்சுரரம்பர்மால்வரைக்கே. (௩௭௩)

தலைவன்றலைவியைவிடுத்தல்.

தேனேற்றகோதைவனவேடரேலொருதிண்கணையில்
வானேற்றுவேனிவராவியெல்லாநுமர்வந்தனரோ
லானேற்றினர்திருக்கோடீச்சுரேசரணிவரைக்க
ணூனேற்றிடாதகல்வேனீயவர்பின்னடந்தருளே. (௩௭௪)

தமர்பின்செல்பவளவன்புறநோக்கிக்கவன்றாற்றல்.

வெற்றிகொள்வேந்தர்தென்கோடீச்சுரம்வாழ்விமலர்வெற்பிற்
சுற்றியன்மேவிடுகாமுன்னேருயிர்கூடுறுங்கா
லொற்றியமெய்விட்டகல்வதினம்மையிங்குய்த்தகன்றார்
பற்றியவேடர்வாளேக்கிம்மேற்பரிவிதுவே. (௩௭௫)

வரைத்துழிக்கண்டோர் மகிழ்ந்துரைத்தல்.

அன்றியல்வள்ளிசெவ்வேண்மணநோக்கினமாங்கதன்பி
னின்றிவர்செய்ம்மணங்கண்டோமினைமற்றிரண்டினுமே
குன்றவர்பேதையர்மன்றல்கண்டோர்விழிகொண்டவின்ப
மொன்றிருமூன்றுகட்கோடீச்சுரவள்ளலோங்கலிலே. (௩௭௬)

தலைவன்றலைவிமுன்பாங்கியைப்புகழ்தல்.

கான்செய்தகொன்றையர்கோடீச்சரேசர்கதிர்வரைமேற்
றேன்செய்தனவித்திருவின்பநானுறச்செய்யுனக்கு
நான்செய்திடுநன்றியாதேனைக்கதிர்முலைநன்னுதலாய்
வான்செய்தநன்றிக்குலகோரியற்றுங்கைம்மாறிலையே. (௧௭௭)

தலைவனைப்பாங்கிவாழ்த்தல்.

இங்கடியேற்குறுநமனென்னுமன்னவென்றனையு
மெங்குலத்தோடிந்தமின்னையும்போற்றினையின்னளொடு
திங்களங்கண்ணியர்கோடீச்சரந்தனிற்செந்திருவும்
பங்கயக்கண்ணனைப்போல்வாழ்தியென்றும்பலனுறவே. (௧௭௮)

தலைவியைவரையுநாளளவும்வருந்தாதிருந்தமைவினாதல்.

இமையாதிருந்தியிமைக்கிற்பிரிவென்றிறைவர்முன்னின்
றுமையாளிடத்தினர்கோடீச்சரேசருயர்வரைப்பா
லமையார்புயத்தாயனைகாப்பினுமீட்டருந்தனத்துக்
கெமையாளிவர்தம்பிரிவினுமெவ்வாறிருந்தனையே. (௧௭௯)

தலைவிவருந்தாதிருந்தமைகூறல்.

சிதம்பயில்வேந்தருள்கோடீச்சரநகர்த்தேவர்பிரான்
பதம்பணியாரழற்கண்போலிருந்துபனிக்கதிரோன்
வதம்புரிதென்றல்வைபங்கன்னல்வில்வேளினைமாற்றியெனக்
கிதம்பண்ணியவதனாற்றுயர்காண்கிலனேந்திழையே. (௧௮௦)

பாங்கிதலைவனைவருந்தாதிருந்தமைவினாதல்.

மையமர்கண்டர்தென்கோடீச்சரமன்னமன்னவெழிற்
செய்யுறுமிந்தமடவன்னமின்றிமுன்பிரிஞ்சிலைவே
ளையம்புகுபொழுதெவ்வாறுநீவந்தடர்தனுறு
வெய்யவிரகப்பசிபொறுத்தாய்சொல்விளங்கிடவே. (௧௮௧)

பாங்கிசெவிலிக்கிருவரன்புமுரைத்தல்.

வேலுறழ்கண்ணிக்குமேந்தற்குமெய்யுருவேறிவர்க்
கோறுறுமாவியுமுள்ளமுமன்புடனின்புமொன்றா

மாலுறுபாகத்தர்கோடீச்சரத்தெங்கண்மன்னுமுயிர்
போலுறுமம்மனைகோக்கிடிங்கினைதுன்புண்ணியமே. (௧௮௨)

பாங்கியில்வாழ்க்கைநன்றென்றுசெவிலிக்குரைத்தல்.

வன்புற்றரவணிகோடீச்சரேசர்வரையிலுன்பெண்
மென்புத்தனம்விருந்தோர்க்கூட்டியேந்தற்குப்வேண்டியிட்டங்
கின்புற்றுப்பின்றுயில்கூர்ந்துமுன்காலையெழுந்திறைஞ்சி
யன்புற்றிடுமனைவாழ்க்கையின்மேலவளாயினளே. (௧௮௩)

செவிலிதலைவிகற்பியனற்றாய்க்குரைத்தல்.

வாலியனீற்றான்கோடீச்சரத்தனில்வாழ்ந்திடுநம்
பாலியற்சொல்லியிறைமீதுவைத்தபரிவுமவண்
மேலியற்கற்பும்பொறையுமுன்னோர்ந்திடுமேதினியோர்
சாலியப்பெண்ணெனக்கூறுகின்றார்மலர்த்தாழ்குழலே. (௧௮௪)

செவிலிமனைவாழ்க்கைத்தன்மையுரைத்தல்.

மறியார்காத்தரன்கோடீச்சரத்துநம்வாணுதலாள்
வறியார்க்கிரங்கலறங்காத்தலின்சொன்மருவுறுதன்
னெறியார்பொருட்குத்தகவேயழித்தனிகழ்பிறவு
மறியாடக்குமனைவாழ்க்கையினன்கமைந்தனளே. (௧௮௫)

செவிலிநற்றாய்க்கிருவர்காதலுமுரைத்தல்.

சந்திரசேகரர்கோடீச்சரமன்னதையன்பின்னே
தந்திரமாகத்தன்காதலைக்கேள்வர்தமக்களித்து
முந்திரவாதவர்காதலைத்தான்கொண்டமோகத்தவ
ரொந்திரத்தேசெம்மனையினுமாலையிலீண்டுறுமே. (௧௮௬)

காதலன்பிரிவுழிக்கண்டோர் புலவிக்கேது விதாயிறைவிக்கென்றல்.

ஆடகவில்லான்கோடீச்சரத்திர்சவண்ணலத்த
நாடகம்பாட்டியலுட்கோளபியகாடிவிழைக்
தேடகப்பூங்குழல்வேசையிற்கேசிடுமீதிறைவி
யூட்டமிக்கபுலவியின்காரணத்துற்றிடுமே. (௧௮௭)

தனித்துழியிறைவி துனித்தழுதிரங்கல்.

வினைத்துயர்தீர்த்திடுங்கோடீச்சுரநம்பர்வெற்பினுல
கனைத்தையும்வெல்வேள்கலகத்திலிர்தவமளியிலே
யெனைத்தனிவைத்துப்பிறரிலங்காத்தற்கிறைவர்சென்றார்
கனைத்துறுதென்றலுந்திங்களும்வந்துனைக்காக்குமென்றே. (௱௮௮)

ஈங்கிதுவென்னெனப்பாங்கிவினாதல்.

இரவியெழுந்துமிருளேதிமையவரிந்திரன்பால்
மரவிவணங்குதென்கோடீச்சுரவள்ளல்பைம்பொன்வெற்பிற்
குரவிவருங்குழன்மானேமகிழ்ந்துகொழுநருங்கண்
விரவியிருந்திடிங்காளின்னலேதுவிளம்புகவே. (௱௮௯)

இறைமகன்புறத்தொழுக்கிறைமகளுணர்த்தல்.

பதுமாதனன்பணிகோடீச்சுரேசர்பனிவரைவாழ்
விதுமாமுகிசென்றுசென்றுபல்போதினும்வீழ்ந்துவரி
மதுமாந்திடுதலின்மாலாயென்னின்பமருவினவர்
பொதுமாதரின்புழுறவகன்றார்கண்ணன்போக்கறிந்தே. (௱௯௰)

தலைவியைப்பாங்கிகழறல்.

பணைவரவம்புனைகோடீச்சுரேசர்பனிவரைப்பொன்
னணைவரம்பைக்கிணையூருமன்வேசையர்க்காசைகொண்டார்
மணவரத்தாரன்பொன்றிகமேல்குலமாதாமின்னே
கணைவாதேதகெடுத்தோதன்மாண்பன்றுகற்பினுக்கே. (௱௯௧)

செவ்வணியணிந்துசேடியைவிடுப்புழி யவ்வணியுழையர்

கண்டழுங்கிக்கூறல்.

முன்னைவறிதிலிகழ்வார்துள்வீதியிம்மொய்குழலாள்
கொன்னைவேளமுஞ்செஞ்சாந்தும்வெட்சியின்கொத்துமணிந்
தென்னைபடர்தனம்மின்னிலைகாட்டற்கிசைந்ததன்றீ
தன்னேர்மிடற்றினர்கோடீச்சுரமென்னணிநகர்க்கே. (௱௯௨)

பரத்தையர்கண்டுபழித்தல்

மாமலர்க்கொன்றையர்கோடீச்சுரத்துறுமாதகத்திற்
பூம்களபதவடன்னிறையும்புறத்தெவருந்
தாமறிவுற்றிடத்தானுமப்பூமகடானெனவே
காமருசெந்துகில்பூண்டனளோவிந்தக்காரிகையே. (௧௬௩)

பரத்தையருலகியனோக்கிவிடுத்தல்.

கருந்திருக்கண்டர்தென்கோடீச்சுரத்துன்மடிமனையிற்
பொருந்தியமுல்லைக்கொடிபூத்ததாகப்புகன்றனர்கள்
பெருந்திறன்மன்னவநீயேகிநோக்கிப்பெருமகிழ்வுற்
றிருந்துசின்னாள்பின்னர்வந்தருள்வாயிவணென்மனைக்கே. (௧௬௪)

தலைவன்வரவுகண்டுவந்துவாயில்கண்மொழிதல்.

ஐயாலடியுற்றுசால்வர்க்குமுப்பொருளன்பினொடு
கையாலுணர்த்தான்கோடீச்சுரமன்னர்காரிகையின்
மெய்யார்ந்தசெவ்வணிகண்டுடன்மீண்டனர்மென்குறிப்புச்
செய்யாமுன்னோர்வோர்க்குரையாற்பயனென்னைதேமொழியே. ()

தலைமகன்வரவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

அருளுற்றமெய்யான்கோடீச்சுரமன்னவாயிழையா
யிருளுற்றிடவிப்படிபுறம்போனவிரவிவரிற்
றெருளுற்றுவகையுறுசெவர்வேந்தர்தெருவில்வந்தார்
மருளுற்றிடாதெதிர்கொண்டேத்தியில்லம்வரவழையே. (௧௬௬)

தலைவியெதிர்கொண்டுபணிதல்.

கனம்வந்தனகண்டர்கோடீச்சுரத்துனைக்கண்டவுடன்
றனம்வந்ததென்றுகளிகூர்மடந்தையர்தம்மைவிட்டு
மனம்வந்ததோவிங்கெளியேனிருக்குமனைவாவிற்
றினம்வந்தனக்கருகின்றனன்கோடிதிறலரசே. (௧௬௭)

புணர்ச்சியின்மகிழ்தல்.

மாலையன்போற்றான்கோடீச்சுரமின்வழங்கியவில்
வேலையினின்றிங்கொருவலைவிசிவிரவிட்டொரு

சேலையுட்பற்றினமோர்பணம்விற்றனஞ்செங்கையுற்ற
தாலைவில்வேட்குங்கிடையாதிவ்வேலையவனியிலே. (௱௯௮)

ஒருவலைவிசி-நீங்குதலைவிட்டு. சேலை-மீனை-பணம்படம்போன்றவல்குல்

விற்றனம்-ஒளியுற்றமுலை, விற்றேறும்

வெள்ளணியணிந்துவிடுத்தழித்தலைவன்வந்துபாங்கியைவேண்டல்,

எள்ளருஞ்சீரன்கோடீச்சுரத்தனைதேவவினால்
வெள்ளணிபூண்டுவருமாதைக்கண்டிங்குமேவினன்மேற்
கள்ளவிழ்கோதைமலர்த்திருமாதைக்கலந்திடச்செ
யுள்ளளவும்மெனைவாடாதுகாத்தருளொண்ணுதலே. (௱௯௯)

தலைவிநெய்யாடியதிருளைசாற்றல்.

பாலாழிதிங்கட்பயந்தாங்கெழின்மகப்பங்கயத்தின்
மேலாளனமாதுயிர்த்துநெய்யாடினள்விற்றிகிரி
மாலானவர்க்கருள்கோடீச்சுரேசனைவாழ்த்துமெங்கள்
கோலாகலவின்றென்னுலாவதிங்கெவன்கூறுகவே. (௨௱)

தலைவன்றன்மனத்துவகைகூர்தல்.

வேணியிலாற்றினர்கோடீச்சுரந்தனில்விற்றிருக்கும்
வாணிகர்கண்ணிதன்பாலார்முலையுநெய்வார்குழலும்
பாணியிற்பாலனுமேனியினீடுபசுநரம்பும்
காணியவென்னதவஞ்செய்தனஞ்சென்றகாலத்திலே. (௨௱௧)

தலைவிக்கவன்வரல்பாங்கிசாற்றல்.

ஊற்றுமணலெனத்தன்னடிக்கென்னெஞ்சுருகிடச்செய்
கோற்றொடிபாகன்றன்கோடீச்சுரமன்னகூர்விழியாய்
பாற்றினஞ்சூழ்வடிவேலார்நாகப்படுகடனின்
றேற்றக்கரைசேர்மதலையைநோக்குதற்கெய்தினரே. (௨௱௨)

மதலை-பிள்ளை, தோணி.

தலைவியுணர்ந்துதலைவனொடுபுலத்தல்.

புரத்தையெரித்தவர்கோடீச்சுரம்வாழ்புரழிறைவ
பரத்தைநம்புற்றவற்கின்றென்னகாரியமயற்றிடுமெவ்
வுரத்தையுறும்பலம்போற்கிடையாதிக்குறும்பயமென்
கரத்தைவிடுவிடுதானையையிதென்னைதவமே (௪௱௩)

தலைவிபாணனைமறுத்தல்

சேனையுறுபுகழ்க்கோடீச்சுரேசர்சிலம்பிடையின்
வீணையிசைக்கவர்ந்தாயிதுகேட்டிக்குமெச்சுவரார்
நாணையிழந்தனுவினுங்காமிக்கரம்பிசைநீ
காணையிற்செடிவெகுளுமுன்பாணகடிதகலே. (௪௱௪)

நாணிழந்தனு-நாணில்லாதமெய்யுடையவேசை, காணையில்-காணும்
வேல், அதுவேபோன்றகண்,
வாயின்மறுக்கப்பட்டபாணன்கூறல்.

விண்மால்வரைச்சிவன்கோடீச்சுரந்தனில்வீற்றிருக்கும்
வண்மால்களிற்றண்ணலுன்பெருமைதநிடின்வையகத்தோர்
பொன்மாரிதூசுமணிமாரியாரப்பொழிவர்பெருங்
கன்மாரிபெய்தனளெம்பெருமாட்டிகறுத்துநின்றே. (௪௱௫)

விறலிய யின்மறுத்தல்.

அப்புறுவேணியர்கோடீச்சுரேசாசலத்திறோர்
கொப்புறுவீணைகொடுபோபோடினிகூறுமிது
தப்புவெங்காடியுந்தேனுவின்பாலுஞ்சருக்கரையு
முப்புநிகரெனச்செல்காவலர்க்கிசையுனிசையே. (௪௱௬)

பாங்கிவாயின்மறுத்தல்.

அகவினைதீர்த்தருள்கோடீச்சுரேசரடிப்பணிந்தோர்
மகவுருவொன்றுங்கிரந்தவர்சூளையர்மாலிற்சிக்கித்
தகவுறுமச்சேய்தவழ்ந்ததுநோக்கிளர்தல்மழலைச்
சுகமொழிகேட்கிலர்நின்றுரின்றுற்றதென்சொல்லணங்கே. (௪௱௭)

விருந்தொடுவந்துழித்தலைவிபொறுத்தமைகண்டுதலைவன்மகிழ்தல்.

தம்மைநிகர்பவர்கோடீச்சுரந்தனிற்றண்பிறைநேர்
செம்மைநுதற்கணைறிம்மாதுதன்மைச்சிலையினையுங்
கொம்மைமுலைவேசையர்க்காப்படார்க்கைகொடுமயங்கு
நம்மையுமுன்னிலைசேர்த்திட்டகற்றவிந்நல்விருந்தே. (௪௱௮)

பள்ளியிடத்தழுங்கல்.

அறங்காட்டுசொல்லரன்கோடீச்சுரமன்னவாயிழையின்
பிறங்காட்டிகல்கொண்மருளர்வந்தாலெதிர்தேர்செலுத்தி
மறங்காட்டுவேழமுழைத்தாடல்செய்யமதித்தல்விட்டுப்
புறங்காட்டுதலென்னவீரங்கொலோவிந்தப்பூவகத்தே. (௨௱௯)

சீறேலென்றவள்சீறடிதொழுதல்.

கானலைநீசென்றலைபுற்றமான்வரிறநாசினியில்
வாரலைவெள்ளம்வெருண்டிடுமோமுன்வாவெலைவே
மானலையுற்றேன்பிழைபொறுத்தாளென்றவ்வத்தனைச்சோ
ருனலைக்குலத்தர்கோடீச்சுரமன்னவொண்டொடியே. (௨௱௰)

இஃதெங்கையாகாணினன்றன்றென்றல்.

வையுறுஞ்சூலத்தர்கோடீச்சுரத்தென்கண்மன்னவநீ
செய்யும்வணக்கமம்மாதர்கண்டாலங்ஙன்சேரவொட்டார்
மையலடைந்துபின்னன்னவர்தம்மனைவாயினின்று
மையிலிருந்ததனைமுனிழந்துகலங்குவையே. (௨௧௧)

அந்தவரியாளையுமறியேனென்றல்.

தேங்கமழ்கொன்றையர்கோடீச்சுரேசர்சிலம்புறுதே
மாங்கனியார்க்குசுகமாவிருந்திடுவண்கிளிபோய்
வேங்கருங்கானத்திடைக்காஞ்சிரங்காய்மிசைந்திடுமோ
பாங்கரும்பாமுலைநானறியேனொருபாவமுமே. (௨௧௨)

காமக்கிழத்தியைக்கண்டமையபர்தல்.

வேயிருட்கண்டர்தென்கோடீச்சுரமன்னவீதியிலுன்
சேயிணைப்பற்றிமுலைமேலணைத்தனள்சென்றனளோ
ராயிழைபார்த்ததையோர்மாதொருத்திக்கவன்சிறிய
தாயிவளென்றனளொருமறித்தனன்றன்களவே. (௨௧௩)

தலைவியைப்பாங்கிதணித்தல்.

இலவினிதழ்ச்செய்யவாய்மங்கையுப்பமைந்திட்டதுபோற்
புலவியதுமிருந்தற்றுகுரீட்டிடல்பொன்மலர்த்தார்
நிலவிவோர்சடைக்கோடீச்சுரேசர்நெடுங்கிரிமேற்
பலவின்புகழ்மன்னருன்றுள்பணிந்தனர்பார்த்தருளே. (௪௧௪)

தணியாளாகத்தலைமகனூடல்.

வாமான்காலகொண்டகோடீச்சுரேசர்வரையிலிவண்
மாமால்கரிமுன்னும்பூவார்சுனையினும்வந்தெனைநீ
காமாநிலமன்னவென்றதக்காலமிக்காலநெஞ்சே
நாமாரிவட்குமக்கிவளார்விடுகட்டினையே. (௪௧௫)

பாங்கிதலைவனையிகழ்தல்.

முன்னாள்விருப்பினைப்பொன்னுடனீந்துமுருகருந்து
பின்னார்க்கவரிடையேறு மனமும்வெகுளியுங்கொண்
டென்னாமுதினைச்சிறுகின்றாயுனக்கீதழகன்
றென்னாவெல்விடைக்கோடீச்சுரேசர்வெற்பேந்தரசே. (௪௧௬)

ஆயிழைமைந்தனுமாற்றாமையும்வாயிலாகவரவெதிர்கோடல்.

கந்தனையின்றவர்கோடீச்சுரத்துறுகாவலர்நீர்
மைந்தனைத்தோட்கொண்டுதந்திரமாவிருவர்தடைந்தீர்
சிந்தனைமாதர்மயக்கிடையென்றனினைவுபக்கு
வந்தணைவுற்றதுசிந்தனைசெய்திடின்மாவியப்பே. (௪௧௭)

புணர்ந்தவன்போயபின்பாங்கியொடுதன்மகனைப்புகழ்தல்.

மருப்பயில்கொன்றையர்கோடீச்சுரத்துமறுகினிடை
யிருப்புறுவேசையிற்கேகுறுந்தோன்றலிரதந்தனைத்
திருப்பிணஞ்சேணின்றுநம்மனைவாயுறச்செயிவன்றான்
விருப்புறக்கற்றதெங்கோவலனுந்தொழின்மெல்லியலே. (௪௧௮)

தலைவிதலைவனைப்புகழ்தல்.

சங்கரயாற்கருள்கோடீச்சரேசர்தடஞ்சிலம்பர்
புக்கதிற்போகவிலை மாதரில்விடைப்போசவிலைத்
தொக்கநம்பால்வைத்தகாதலிற்காண்மிகததோன்றியது
மிக்கவர்நேசயிடையூறுறாதென்றன்மெய்பணங்கே. (௪௧௯)

பாங்கிதலைவியைப்புகழ்தல்.

திருந்திழையார்தென்கோடீச்சரேசர்செழுஞ்சிலம்பிற்
பொருந்துமிவ்வஞ்சிபருள்பூந்திறைபோன்புரிபிழைமிக்
இருந்ததையெண்ணிமுன்காயாதுறுபலனீந்தரு
வருந்திறற்கற்புக்கரசியென்றேதிடுமெம்புவியே. (௪௨௰)

கல்விக்குப்பிரிவுதலைவன்பாங்கிக்குணர்த்தல்.

செல்வியவளர்திருக்கோடீச்சுரேசர்செழுங்கிரிமேற்
சொல்விறலுற்றவறமுரசனன்குட்டொகவியற்றும்
பல்விதமானபுகழ்நல்கும்வேந்தர்பரவச்செயுங்
கல்வியழகேயழகாமெவருக்குங்காரிகையே. (௪௨௧)

கல்விப்பிரிவுபாங்கிமறுத்தல்.

சிறந்தருகுலத்தர்கோடீச்சரம்வாழ்கிருபசென்று
சிறந்திடுகல்விகள்வேண்டுவயாவையுந்தேர்ந்துபின்ன
ரிறந்தமின்றொன்பையன்னார்களாகவியற்றுநற்கோர்
திறந்தருவிஞ்சையுங்கற்றறிகாணவுஞ்செல்வினையே. (௪௨௨)

தலைவனுடன்படுத்தல்.

கடமாவுரிபோர்த்தினமுகில்சூழுங்கிரிப்பவளத்
தடமால்வரைபுணாகோடீச்சரேசர்தமிழ்வெற்பிலோர்
மடமானையென்றனக்கீந்தாயம்மாநெறுவாழ்த்திடகான்
நீடமார்கலைபிறையாயின்ன்றேகவின்சேயிழையே. (௪௨௩)

கல்விப்பிரிவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

வெற்றிகொண்மால்விடைக்கோடீச்சுரவள்ளல்வெற்பனைய
மற்றிணிதோளுடைச்சுந்தரானநம்மன்னவர்நூல்
பற்றிவர்க்கரசாதிமெய்ஞ்ஞானசம்பந்தர்பதம
பெற்றிடவெண்ணிப்பிரிந்தாரின்றேதப்பிறைநுதலே. (௪௨௪)

தலைவிகார்ப்பருவங்கண்டுவருந்தல்.

கல்விக்கடலைப்பருகியர்நீண்டுக்கவியமைதன்
சொல்வித்தகமுறப்பெய்வதற்கேகினர்தோன்றுமுன்னிச்
செல்விற்குனித்தம்புதூற்றிடுமேலென்னசெய்குவனியான்
வல்விற்செறியிழைகோடீச்சுரேசர்வரையிடத்தே. (௪௨௫)

பாங்கியாற்றுவித்தல்.

மதிபுனைவேணியர்கோடீச்சுரமன்னமாதிறைவ
ரதிர்மணித்தேர்வந்ததுவால்வளைகைக்கணிபணியைக்
கதிர்முலையேற்றலர்கூந்தலில்வேய்விற்கலைபுனைந்தி
டெதிர்சென்றழைத்திடுவோமெழுநீத்திடியங்கின்னலையே. (௪௨௬)

காவற்பிரிவுதலைவனுணர்த்தவுணர்ந்ததோழிதலைவிக்குணர்த்தல்.

பொன்னலமேருவிற்கோடீச்சுரேசனைப்போற்றிடுநம்
மன்னவர்காவலனாவாலுரியதன்மாதலாநீ
டின்னலுறாமற்புரப்போனென்றாரென்னவின்றகன்றார்
கன்னலஞ்சொல்விமண்காக்கமுன்னீதுகருதிலனே. (௪௨௭)

தலைவிகூதிர்ப்பருவங்கண்டுவருந்தல்.

ஆடைவன்றோலுடைக்கோடீச்சுரேசாசலத்துறும்
வாடையிவ்வாடையிற்றீர்ந்திடுமோவன்பர்மார்பமின்றிப்
பெடைதன்சேவல்சிறகாலணைத்தும்பெரிதயரு
மாடையுழுந்தார்க்குலமும்வெளிர்த்ததுடன்முற்றுமே. (௪௨௮)

தோழியாற்றுவித்தல்.

செயிர்விடைப்பாகர்தென்கோடீச்சுரேசர்செழுஞ்சிலம்பில்
வயிருடனன்பர்பொற்றேர்மணியார்க்கின்றமத்துறுமென்
றயிரெனநீதளரேல்சரற்காலத்தகையுணர்ந்தன்
னுயிரினைக்காக்கவந்தார்நிலங்காத்தல்விட்டொன்றுநலே. (சஉசு)

தூதிற்பிரிவு நலமகளுலுணர்ந்ததோழிதலைவிக்குணர்த்தல்.

பாலங்கொள்ளையினர்கோடீச்சுரேசர்பரங்கிரிநம்
வேலரிரு*மன்னர்போரூரிடந்தனின்மேவியெதிர்
சாலத்தணிகைகண்டுண்டித்திருப்பநிசாருதுமென்
ருலக்குடிகொண்டகண்ணணங்கேயின்றகன்றனரே. (சஎ)

* நம்மிறைவர் போர்செய்யிடத்துச்சென்றுஅதைத்தணிவித்துஇவ்

வூர்வருவேன்.

தலைவிமுன்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

முன்பனிவெங்கும்புகைபோற்பரந்துமுன்னமனும்
வன்பனிதன்கண்மறைந்தென்றனுருயிர்வாங்கவரு
மன்பனில்காலத்தவனொடெவ்வாறமராற்றுவல்பே
ரின்பனிராகுலன்கோடீச்சுரேசனிமலனைக்கே. (சஅ)

தோழியாற்றுவித்தல்.

அசைஞாயிறுதிங்கட்கண்ணன்செவ்வாயினனற்புதன்விண்
மிசைவாய்புகழ்த்திருக்கோடீச்சுரவண்ணல்வெற்பிடத்தி
லிசைவாவியாழஞ்சொல்வெள்ளிபற்கோற்றொடியிப்பொழுதன்
னசைவாய்ந்துபொய்வசனியாதமன்னிங்குநண்ணுறுமே. (சஅஉ)

இசையுற்றயாழ்-வெள்வளை.பொய்வசனியாதமன்னன்-நசை-ஆசை.

துணைவயிற்பிரிவு தலைவனுலுணர்ந்ததோழிதலைவிக்குணர்த்தல்.

வானார்மதிச்சடைக்கோடீச்சுரேசர்வனாயிடத்தி
லூனார்வடிவேலிறைவரோர்வேந்துக்குதவியுறப்

போனார்வடவின்றுன்னன்பர்வந்தார்துணைப்போயெனைநீ
கானார்தாவருவேனென்வேளாதிருநாதலே. (௬௰௩).

தலைவிபின்பனிப்பருவங்கண்டுவருந்தல்.

காலனைக்காய்கொண்டுதைத்துயிர்வாட்டிக்கலங்கிடொரு
பாலனைக்காத்தவர்கோடீச்சரத்திற்பரவைவிடம்
போலணைபின்பனியாலென்றனுயிர்போதலுறின்
மேலனைபோலுமின்னேபழிவந்தணைமேவிடுமே. (௬௰௪)

துணைவயிற்பிரிவிற்றோழியாற்றுவித்தல்.

நீடல்லெனுங்கண்டர்கோடீச்சரமன்னநேரிழையோ
ராடலவற்காவிடுதுறைமேவிடரசையெண்ணிக்
கூடலைப்பார்த்துறுநெஞ்சலைபுநோக்கிக்குலவுமனம்
வாடலவற்கிறைவெற்றியங்கித்தின்றுவந்திடுமே. (௬௰௫)

தலைவன்பொருட்பிரிவுபாங்கிக்குணர்த்தல்.

பொன்னேயெனுமுன்னவசமூற்றொல்லைப்புறந்தடவி
யென்னேயெனப்பின்விழித்தெழுத்தெங்குற்றறித்துணைநாள்
கொன்னேயென்றுட்கென்பொருட்பிரிவென்னெனக்கூறுவனீ
மின்னேயெதிர்புகல்கோடீச்சரம்பர்வெற்பிடத்தே. (௬௰௬)

பொருட்பிரிவுபாங்கிதலைவிக்குணர்த்தல்.

படுவொன்றறம்பொருளின்பெனுமூன்றனுட்பாங்கிரண்டு
கடுவொன்றுளதெனினுண்டாமென்றோதிநலந்தருமா
வடுவொன்றிகண்டுவிரென்னகண்ணிமகிழ்நர்சென்றார்
கடுவொன்றுகந்தார்கோடீச்சரர்தண்கார்வரைக்கே. (௬௰௭)

தலைவியிளவேனில்கண்டுவருந்தல்.

மென்மலர்க்கொன்றையர்கோடீச்சரத்திளவேனில்கொண்டு
துன்மதிவெண்குடையானைத்தீள்கடற்றுந்துபிப்போர்

மன்மதன்றுதுவளர்கோல்விசையமருவவரு
மென்மனம்வாடியிங்கேதறியார்பொருட்கேகினரோ. (௯௮)

பாங்கியாற்றுவித்தல்.

கங்கைகொள்வேணியர்கோடீச்சுரேசர்தண்கயிலை
டங்கயமுனைமுலைத்தென்குமரியனநடையா
யிங்கினிச்சிந்தனைகோதாவரியுறையீர்ந்தொடையா
தங்கவருகின்றனர்வேனில்கண்டுதளர்ந்திடலே. ([illegible])

கயமுனை-முலையானையொடுபகைக்குமுலை.

தலைவனுருவுவெளிப்பாடுகண்டுசொல்லியது.

பொன்னுறுமேனியர்கோடீச்சுரேசர்பொருப்பிலொரு
மின்னுறுகின்றதிலேபிறையும்வியன்குமிழும்
பன்னுறுவில்லுங்கணையுங்கமலப்பருமுகையு
மென்னுறுபார்வைமுன்னேநாணுந்தோன்றுமிதென்வியப்பே. (௪௱)

ஊர்வந்ததலைமகன்பாகற்குச்சொல்லியது.

மலைவளைகையினர்கோடீச்சுரம்வாழ்வலவமுன்வா
னிலைவளர்மாதவிகைத்திறங்கேட்டுளனீடதன்பி
னுலைவறுசீர்நளன்செய்கைகண்டேனின்றைக்குன்கைகண்டேன்
சிலைநுதல்பாலென்மனத்தின்முன்றேர்வரச்செய்தனையே. (௪௱௧)

பாங்கிதலைவன்வந்துழிமகிழ்ந்துரைத்தல்.

மின்னிற்கிளர்சடைக்கோடீச்சுரவள்ளல்வெற்புறுநின்
பொன்னிற்குப்பொன்னுமணிக்குமணியும்புரவலநீ
மன்னிற்குளெங்குநிறைத்தாய்கொணர்ந்துமகிழ்வினினிக்
கன்னிக்குயின்மொழிதன்னுமில்வாழ்க்கைகணந்தருமே. (௪௱௨)

தலைமகளோடிருந்ததலைவன்கார்ப்பருவங்கண்டுசொல்லியது.

புறத்தாழ்மென்பூங்குழற்பொன்னிடைவந்துபுணர்தலுற்றேன்
றிறத்தார்மழுப்படைக்கோடீச்சுரேசர்செழுமிடறு
நிறத்தாட்சிலம்புசடையருளாமெனநீயினிமெய்
கறுத்தார்த்துமின்னிப்பொழிமழைகாணுங்கனமுகிலே. (௪௱௩)

கோடீச்சுரக்கோவை முற்றிற்று.

Dr. U. V. S. IYER LIBRARY MADRAS-90 2346 (4615)